for Young friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்

# தடுமாற்றமின்றி வாழ்ந்திட வா!



Vol 32-Issue 11 - November - 2025

Private circulation only



# மகா பரிசுத்த ஸ்தலம்

*(THE HOLY OF HOLIES)*

Rev. Selvinraj G Charles



கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு வாலிபர்களே,

அதி சீக்கிரமாய் வரப்போகிற இயேசுவின் இன்ப நாமத்தில் அன்பின் வாழ்த்துகள் !

இந்த மாதம் ஆசரிப்புக் கூடாரத்திலுள்ள மகா பரிசுத்த ஸ்தலம் போகும் வழியைக் குறித்து அறிந்துக் கொள்ளப் போகின்றோம். ஆசரிப்புக் கூடாரமானது (வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம்) ஒரு மனிதனின் ஆவி, ஆத்துமா, சரீரம் என்பதை விளக்கும் படமாக இருக்கிறது (1 தெச. 5:23).

நம் சரீரமானது எப்படி வெளிப்படையாக பார்க்க முடிகிறதோ, அது போலவே ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரம் மாத்திரமே வெளிப்படையாக பார்ப்பதற்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய ஆவி, ஆத்துமாவைப் போலவே பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் பார்க்கக்கூடாதபடி மூடப்பட்டிருக்கும்.

### பிரிப்பு (Separation):

இது ஆசரிப்புக் கூடாரத்தின் மற்ற பகுதியான பரிசுத்த ஸ்தலத்திலிருந்து கனமான ஒரு திரையால் பிரிக்கப்பட்டிருக்கும். இது தேவனின் பரிசுத்தத்தையும், மனிதர்களாகிய நாம் நேரடியாக அவருடைய பிரசன்னத்திற்குள் நுழைய முடியாத நிலையையும் குறிக்கிறது. மெய்யான ஆவிக்குரிய தன்மையின் ரகசியமே, ஒருவன் தன் சுய சித்தத்தை மறுத்து பிதாவின் சித்தத்தைச் செய்வதுதான். இப்போது இயேசு நமக்காக புதிதும், ஜீவனுமான மார்க்கத்தைத் திறந்து வைத்ததால், அதிலே நாமும் ஒவ்வொருநாளும் நடக்க முடியும் (எபி. 19:20).

இது ஏதோ ஒருமுறை நுழையும் வாசல் அல்ல. நம் ஜீவிய காலம் முழுவதும் நாம் நடக்கக்கூடிய வழியாக அது இருக்கிறது. அப்போது மாத்திரமே, நாம் எப்போதும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஜீவிக்கிறவர்களாய் இருக்க முடியும்.

- ### உடன்படிக்கைப் பெட்டி (Ark of the Covenant):

மகா பரிசுத்த ஸ்தலத்தின் உள்ளே உடன்படிக்கைப் பெட்டி **(Ark of the Covenant)** வைக்கப்பட்டிருக்கிறது. இது தேவன் இஸ்ரவேலரோடு செய்த உடன்படிக்கையின் அடையாளமாக இருக்கிறது.

- ### கிருபாசனம் (Mercy Seat):

உடன்படிக்கைப் பெட்டியின் மேல் கிருபாசனம் **(Mercy Seat)** இருக்கும். இது தேவனின் சிங்காசனமாக கருதப்பட்டது.

- ### பிரதான ஆசாரியன் (High Priest):

வருடத்திற்கு ஒருமுறை, பாவ நிவர்த்தி நாளில் பிரதான ஆசாரியன் மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைய முடியும். அவன் இஸ்ரவேல் மக்களின் பாவங்களுக்காக பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தத்தைக் கிருபாசனத்தின் மீது தெளிப்பான்.

- ### பின்னணி (Background):

புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்தது. இது இயேசுவின் பலியின் மூலம் மனிதர்கள் நேரடியாக தேவனிடம் செல்ல இப்பொழுது வழி திறக்கப்பட்டுள்ளது.

மகா பரிசுத்த ஸ்தலம் என்பது தேவனின் பிரசன்னம் தங்கியிருந்த இடம். அந்த காலத்தில் ஒரு பிரதான ஆசாரியன் மட்டுமே உள்ளே சென்று ஜனங்களுக்காக பரிந்து பேச முடியும். ஆனால் இன்று இயேசு நமக்காக செய்த தியாகத்தால் அந்த பிரிவினை நீங்கி, எவரும் அவரை அணுக முடியும். நாமும் இயேசு நமக்காக சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம் பாவக்கறையிலிருந்து கழுவி சுத்திகரிக்கப்பட்டுள்ளோம். ஆகவே நாமும் தேவப்பிரசன்னம் நிறைந்திருக்கும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு சென்று அவரை முழு மனதுடன் தொழுது கொள்வோம். அவர் பரிசுத்தர், நம்மையும் அவர் பரிசுத்தப்படுத்துவார்.

மெய்யான ஆவிக்குரிய தன்மையின் ரகசியமே, ஒருவன் தன் சுய சித்தத்தை மறுத்து பிதாவின் சித்தத்தை செய்வதுதான். நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையானது ஒருபோதும் உணர்வுகளின் அடிப்படைக் கொண்டதாக இல்லாமல், தேவனைத் துதிப்பதே நம் சித்தமாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் இவ்வுலகின் சகல காரியங்கள் மேலும் தேவன் ஈடுபாடு வைத்திருப்பவராக இருக்கிறார்.

மகா பரிசுத்த ஸ்தலம் போல, நம்முடைய இருதயமும் தேவனுக்கு முன்பாக மகா பரிசுத்தமாய் இருக்கும்போது, நமது துதிபலி தூய்மையான தூய பலியாக இருக்கும். நாமும் நம் தேவனைப் போல இன்னும் பரிசுத்தமாவோம். ஆமென் !

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம்
வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

இளசுகள் நாலும், இலை சாப்பாடும் - 5
ஏன் யூதர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கிறார்கள்? - 8
தங்க குருவி - இந்தியா - 10
செவித்திறன் குறைபாடு - 12
5G அப்டேட் மோசடி - 13
சமூக நுண்ணறிவு - 18
வாசற்படியில் நியாயாதிபதி - 19
இறையியல் Vs மாம்சயியல் (Theology Vs Myology) - 20

# தடுமாற்றமின்றி வாழ்ந்திட வா!

என் அன்பு இளம் நெஞ்சங்களுக்கு, கிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!

தோல்விகளைச் சந்திக்காத மக்களே இந்த உலகத்தில் இல்லை. நடைமுறை வாழ்க்கையில் வெற்றியைப் போல, தோல்வியும் நம்முடைய வாழ்க்கையில் முன்னேறி செல்வதற்கு உதவியாக இருக்கும்.

ஒவ்வொரு வெற்றியின் பாதையிலும் ஏராளமான அல்லது அநேக தோல்வி தடங்கள் தென்படுவது யதார்த்தம் ( Reality ). ஆனால் நம்முடைய குழந்தைப் பருவத்தில் இருந்தே தோல்வியே கூடாது, எப்போதும் எதிலும் வெற்றியே வேண்டும் என்ற மனநிலையில் நாம் வளர்க்கப்படுகின்றோம். ஏதேனும் ஒரு தோல்வியை நாம் சந்திக்கும் போது பதறிப் போவதோடு, பல விபரீதமான முடிவுகளையும் எடுக்கிறோம்.

இப்படிப்பட்ட நேரங்களில் நாம் தடுமாறாமல் பிரச்சினைகள் சிறிதோ, பெரிதோ அதை நேரடியாக மேற்கொள்ள தேவ பலனையும், தேவ வல்லமையையும் கர்த்தருடைய சமூகத்திலிருந்து பெற்றுக் கொண்டு, அவருடைய வார்த்தையின்படி வாழ நம்மை அர்ப்பணிக்கும் போது, நமது வாழ்க்கையில் தடுமாறாமல், இந்த உலகத்தில் கடவுள் நமக்கு நியமித்திருக்கிற வாழ்க்கையின் ஓட்டத்தில் முன்னேறி செல்வோம்.

**“நீர் என் இருதயத்தை விசாலமாக்கும்போது, நான் உமது கற்பனைகளின் வழியாக ஓடுவேன்” என்று சங்கீதம் 119:32இல் பார்க்கிறோம்.**

கர்த்தர்தாமே நமது வாழ்க்கைப் பாதையில் வருகிற சவால்களைத் தாண்டி, தடுமாற்றம் இன்றி ஓடிட பெலன் தருவாராக. ஆமென்!

அக்டோபர் மாதத்தில் வட இந்திய பணித்தள ஊழியங்கள், வாலிபர் முகாம்கள், பயிற்சி முகாம்கள் மற்றும் வாலிபர் கூடுகைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துக் கொடுத்தார். நிச்சயமாக கர்த்தர் கடந்த மாதங்களில் நடைபெற்ற ஊழியத்தின் மூலமாக மகிமைப்பட்டார். ஜெபித்த உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் உண்டாக ஜெபித்து, செயல்படுவோம்.

தேவ கிருபை எப்பொழுதும் உங்களோடிருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்,
ஜெ. டேனியல் அருள்மணி



# தடுமாறிய ஊழியம்

## - பிலேயாம்

1st WEEK MESSAGE

TORAH MISSION

Mr. Isaac Kamalesh

**பிலேயாம் பாலாகின் ஊழியக்காரருக்குப் பிரதியுத்தரமாக: பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் தந்தாலும், சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் செய்யும் பொருட்டு, என் தேவனாகிய கர்த்தரின் கட்டளையை நான் மீறக்கூடாது" (எண். 22:18). "அப்பொழுது பிலேயாம் பாலாகை நோக்கி: பாலாக் எனக்குத் தன் வீடு நிறைய வெள்ளியும் பொன்னும் கொடுத்தாலும், நான் என் மனதாய் நன்மையாகிலும் தீமையாகிலும் செய்கிறதற்குக் கர்த்தரின் கட்டளையை மீறக்கூடாது; கர்த்தர் சொல்வதையே சொல்வேன்" (எண். 24:12).**

இந்த வார்த்தைக்கு சொந்தக்காரனான ஊழியனுக்கு நீங்கள் வைத்திருக்கும் தலைப்பு கடுமையாக இருக்கிறதே என்ற உங்கள் வார்த்தைகளை என்னால் கேட்க முடிகிறது. இதைவிட மேலான ஓர் தீர்க்கதரிசன வார்த்தையை உதிர்த்தவர் இந்த தீர்க்கதரிசி தான். அநேகரால் அதிகம் கவரப்பட்ட வசனம்: **"ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும், ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்"** என்ற கிறிஸ்துவைக் குறித்த தீர்க்கதரிசனம் தான். இந்த தீர்க்கதரிசன வார்த்தை சொன்னதாலே இந்த தலைப்பை வைக்க மனமில்லை என்றாலும், இன்றுள்ள சில ஊழியர்களுக்கும், வரப்போகும் சில ஊழியர்களுக்கும், தலைமுறை தலைமுறையாக தொடரும் ஒருசில சந்ததி ஊழியர்களுக்கும், கட்டிய கட்டடங்களைக் காக்க வந்திருக்கும் ஒரு சில ஊழியருக்கும், ஓர் தகவல்களைச் சொல்ல இந்த தலைப்பே ஏற்றது என்று நினைக்கிறேன். இப்போது செய்திக்குள் செல்வோம். எண்ணாகமத்தில் காணப்படும் பிலேயாமின் சரித்திரத்தில் நேரடியாக நாம் கற்றுக் கொள்ள முடியாத ஒன்றாக இருந்தாலும், மீகா சொல்வதை வைத்து ஒரு சில முடிவுக்குள் வர முடியும். ஆனால் புதிய ஏற்பாட்டில் யூதா புத்தகத்தில் இதை தெளிவுப்படுத்தும் போது நமக்கு புரிகிறது. அதாவது அவன் கூலிக்காகச் செய்தான் என்று. அதைவிட வெளிப்படுத்தலில் சபைகளுக்கு சொல்லுகிறது "பிலேயாமின் போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள்" என்ற வார்த்தை. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது "பிலேயாமின் போதகம்". அப்படியே பேதுரு என்ன சொல்கிறார் என்று பார்த்தால், "பிலேயாமின் வழியைப் பின்பற்றி போனவர்கள்" என்றும், கழுதை தீர்க்கனுடைய மதிகேட்டைத் தடுத்தது என்றும் கூடுதலாக அந்த நிகழ்வைக் குறித்து சொல்வதைப் பார்க்கலாம்.

ஏதேன் தோட்டம் துவங்கி பெத்லகேம் வரை 4000 ஆண்டுகளாக சாத்தான், மேசியாவின் பிறப்பை தடைச் செய்து தொடர்ந்து போராடி தோற்ற இடத்தில் அவனுக்கு பிலேயாம் துணை போனதுதான் அதிர்ச்சி. காரணம் அவன் அறிவு இருந்தும் கடவுளின் வழிநடத்துதல் இல்லாமல் செயல்பட்டது தான்.

ஊழியத்தின் முக்கியம் என்னவென்றால் எல்லாம் அறிந்திருக்க வேண்டும். மூளையில் அறிவுடைவனாக இருக்க வேண்டும். ஆனால் இருதயத்திலிருந்து ஊழியம் செய்ய பழக வேண்டும். மட்டுமல்லாமல் சொல்ல வேண்டியக் காரியங்களை மட்டும் சொல்ல வேண்டும். சரியான வார்த்தைகளைக் கூட தவறான இடத்தில் பயன்படுத்தக் கூடாது (மத். 7:6). பிலேயாம் தன் சகாக்களிடமிருந்தோ, சொந்தங்களிடமிருந்தோ அல்லது முன்னோர்களிடமிருந்தோ கற்றுக் கொண்டதை மூளையிலிருந்து செயல்படுத்தியது.

உன் அளவுக்கு மீறிய வார்த்தை உன்னையும், உன்னைச் சார்ந்தவர்களையும், நீ விரும்பும் கூட்டத்தையும் தடுமாறச் செய்யும். ஆம்! பிலேயாமுக்கு அறிவு இருந்தது. ஆவிக்குரிய வழிநடத்துதல் இல்லை. இன்றும் அறிவு நிறைந்த வார்த்தைகளைச் சொல்கிறோம் என்று நினைத்து வலைத்தளத்தில் பரப்புவது அநேக சந்தேகத்தையும், குழப்பத்தையும் கொடுத்து, நம்முடைய நடைமுறை வாழ்வை வீழ்த்துவதற்கான முக்கிய காரணமாகிவிடுகிறது. அது மட்டுமல்லாமல் அநேகர் தடுமாறவும் காரணமாகிறது. சமூகத்தில் பலதரப்பட்ட இளைஞர்களைக் கவர (அவர்களின் முறையை, ஆசையை, விருப்பத்தை, செயல்பாடுகளைக் கையாண்டு), பெரும் கூட்டத்தைத் தன் மந்தையில் சேர்க்க கையாளப்படும் முறை கூட அநேகருக்கு தடுமாற்றத்தை உண்டாக்கும். தேவனுடைய ராஜ்யத்தை அறிவிலிருந்து கட்ட இயலாது. ஆனால் அது ஆவியானவரின் செயல்பாட்டால் நாம் இணைந்தால் முடியும்.

தம்பி, தங்காய்! நீ தெரிந்தக் காரியங்களை அல்லது கற்றக் காரியங்களை ஆன்மீகத்திலிருந்து செயல்படுத்தினால் தடுமாற ஏதுவாக அமையும். இது ஆன்மீக தலைவர்களுக்குரிய பண்பு. நீ ஆன்மீக தலைவனாய் மாறி விடாதே. ஆனால் ஆவியில் நிறைந்து கடவுளின் வழிநடத்துதலின் மூலம் செயல்படும்போது, அது அநேகருக்கு சுவிசேஷமாகச் சென்றடையும். இங்கு தடுமாற்றம் என்பது இல்லை. இது ஆவிக்குரிய தலைவனின் பண்பு. நீ ஆவிக்குரிய தலைவனாய் வாழ உன்னை அர்ப்பணி.

Mr. Isaac Kamalesh

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

(சொன்னபடியே நான்கு பேரும் கோல்டன் ரிசார்ட் மெயின் கேட் வந்துவிட்டனர்)

சாதுரியன்: டேய் ! ! எங்க சாப்பாடு?

சத்தியன்: இந்தா இந்த ராட்டினத்துல தான்..... மேல கொண்டு போய் தான் சாப்பாடு கொடுப்பாங்க. நம்ம இந்த கடலையும் சிட்டியையும் பார்த்துக்கிட்டே சாப்பிடலாம்.

சாதுரியன்: எப்படிடா பயமா இருக்காதா? எல்லாம் நம்மள நடுங்க வைக்கிறது. நியூஸில கடைசியா தங்க விலை கேட்டது போல இருக்கிறது... உச்சத்துல... போய்... பார்த்தாலே நடுக்கமா இருக்கிறது... நடுங்கிகிட்டே சாப்பிட முடியாதுடா. நான் இந்த விளையாட்டுக்கு வரல. மேல போனபிறகு ராட்டினம் வேலை செய்யலனா, பிறகு நம்மள இறக்க கிரேனை வரச் சொல்லுவாங்க அல்லது ஹெலிகாப்டர் வரும். அது வர்றதுக்குள்ள சாப்பாட்டோட நாமளும் நாறிடுவோம். வேண்டாம் சாமி இந்த விளையாட்டு.

விஷயம்: சரி கீழே சாப்பிடுவோம்.

ரகசியம்: கோல்டு ஏன்டா உச்சத்துக்கு போகுது. இதுல எதுவும். அரசியலிருக்குமோ...

விஷயம்: ஆமா, இதுல சர்வதேச அரசியல் இருக்குதுன்னு சொல்லுறாங்க. ஏன் இந்த பெட்ரோல், டீசல்ல கூட அரசியல் இருக்குன்னு சொல்லுறாங்க. ஒரு சினிமாவாவே வெளி வருதாமே..... இப்போ பெட்ரோல், டீசல் விலையும் கூட உயரப் போகுதாமே.

சாதுரியன்: எனக்கு பெட்ரோல், டீசல் விலையைப் பற்றி கவலையே இல்ல. ஏன்னா நான் எப்பவும் 100 ரூபாய்க்கு தான் பெட்ரோல் போடுவேன்.

(எல்லாரும் சிரிப்பு. நீ இருக்கிற வரை நம்ம நாடு வல்லரசாக மாறின மாதிரி தான்)

(Waiter Order எடுக்க நிற்கிறான்)

சாதுரியன்: **Rawalpindi Chicken, Rafiqui Rhara mutton, Bholari paneer, Sukkur sham savera Kofta, Bahawalpur Naan**

விஷயம்: என்னடா... இது நம்ம இந்தியன் விமானப்படை ஆண்டு விழாவுல ஆபீஸர்ஸ் சாப்பிட்ட பாகிஸ்தான் ஸ்பெசல் மாதிரி இருக்கு.

சாதுரியன்: கரெக்ட்.... இன்னைக்கி நாம சாப்பிடுவோம். நீ என்னடா யோசிக்கிற.

விஷயம்: இல்ல, சாலொமோன் வச்சிருந்த தங்கத்தை இன்னைக்கு மதிப்புள கணக்கிட்டா எவ்வளவு இருக்கும்.

சாதுரியன்: அதுவா... ம்ம் மொத்த மிடில் ஈஸ்ட் நாட்டு சொத்தை சேத்தாலும் கிட்ட வராது. சரி, பைபிள்ல தங்கத்த பற்றி ஏதாவது இருக்கா?

சத்தியன்: ஏன் இல்ல.... ஆதியாகமம் (2) ஏதேன் தோட்டம், முதல் நதி பாய்கிற இடமே கோல்டு விளையுற இடம் தான். ஆதியாகமத்தில் தொடங்கி வெளிப்படுத்தல் (21) வரை நகரத்தின் வீதி சுத்த பொன்னுன்னு முடியுது.

ரகசியம்: நடுத்தரவர்க்க குடும்பம் தன் பெண் பிள்ளைகளின் திருமணத்திற்கு எவ்வளவு கஷ்டபடுவாங்கன்னு நினைச்சா பயமா இருக்கு.

சாதுரியன்: பயமா ! ஏன் பைபிள்ல ஆபிரகாமின் வேலைக்காரன் ரெபெக்காளுக்கு கம்மல், வளையல் கொடுத்து பெண்ணை அழைச்சிட்டு வந்து ஈசாக்குக்கு கல்யாணம் முடிச்சதா இருக்கு.

ரகசியம்: தெளிவாச் சொல்லு.

சாதுரியன்: அதாவது மாப்பிள்ளை தான் தங்க நகைகளை செஞ்சு பெண்ணுக்கு கொடுத்து கல்யாணம் கட்டணுமா.

சத்தியன்: ஏன்? இது தெரியாம தான் நீ இதுவரை 100 கல்யாணத்துக்கு மேல பண்ணி வச்சிருக்கேன்னு மார்பு தட்டுனியா? நல்லா இருக்கே, இதுவரை நீ யோசிக்கவே இல்ல அப்படி தானே !

ரகசியம்: சரி தான்... வாசிச்சிருக்கேன்... எல்லாமே அந்த 100 நிச்சயதார்த்த வீட்டுலதான். ஆனா யோசிக்கல, சரி இதை ஏன் பிரசங்கம் பண்ணல. இதை மாத்தக் கூடாதா அப்படின்னெல்லாம் சொல்லி என்னை உசுப்பேத்தி என் வேலைக்கு ஒல வச்சிராத.

(எல்லோரும் சிரிப்பு) யாராவது இவனுக்கு சொல்லுங்கடா. இது வேலை இல்லை ஊழியம்னு.

விஷயம்: சரி கோல்டு மேட்டருக்கு போவோம்.

சாதுரியன்: நான் வாசித்த அளவில். தோராவில் ஆபிரகாம் பொன், வெள்ளி மற்றும் மந்தைகள் கொண்ட செல்வ சீமான் என்று தான் உள்ளது. அதே வார்த்தையை வேலைக்காரன் லாபான் வீட்டிலும் சொல்லுகிறான். So ‘மனுஷங்க ஸ்டேட்டஸ்’ சொல்ல கோல்டு பயன்படுகிறது. அதே நேரத்தில் யாத்திராகமத்தில் ஆசரிப்பு கூடாரத்தைப் பத்தி படிக்கும்போது பொன் வளையங்கள், பொன் கிருபாசனம், பொன் குத்துவிளக்கு, பொன் பாத்திரங்கள், பொன் மார்ப்பதக்கம், நெற்றியில் கட்ட வேண்டிய கிரீடம், பொன் தகடு என அடுக்கிக்கொண்டே போகலாம். இதையும் சாலொமோன் சிங்காசனத்தைப் பொன்னால் மூடினான், கேருபின்களைப் பொன்னால் மூடினான், பலி பீடத்தை பொன்னால் மூடினான், அவன் வீட்டுப் பாத்திரங்களெல்லாம் பொன், மொத்தத்துல கோல்டு ஒரு “ராயல்டிக்கு’ அடையாளம் என்று சொல்லலாம்.

விஷயம்: டேய் மூச்சு விடாம சொல்லிட்டே. ரொம்ப பாதிக்கப்பட்டுட்டியோ? இதையே யோசித்துட்டு இருந்திருக்கிற.

சாதுரியன்: ஆமா ஆமா... சமீபத்திய என் சிந்தையும் கோல்டு விலை மேல் தான் இருந்துச்சு. (சிரிப்பு)

ரகசியம்: ஓ நான் கோல்டை விட, அதுக்கு மேல என்ன இருக்குன்னு யோசிக்கும்போது சங்கீதம் மற்றும் நீதிமொழிகள்ல நெறைய இருக்கு. அதாவது, கர்த்தருடைய நியாயங்கள் தங்கத்தை விட மேலானது. கர்த்தருடைய வேதம் ஆயிரக்கணக்கான பொன் வெள்ளியைக் காட்டிலும் மேலானது. பொன்னைப் பார்க்கிலும் அவரது கற்பனை மேல். சாலொமோன் சொல்வதைப் பார்த்தால் பொன்னை விட ஞானத்தை சம்பாதி. பொன்னைவிட தயை மேல். நல்ல வார்த்தை பொன் ஆப்பிளை விட மேல். பொன்னை விட மேலானது இவ்வளவு இருக்கும் போது நாம கவலைப்பட வேண்டியது பொன்னை விட மேலான காரியத்துக்கு.

சத்தியன்: ஆனா, வேதாகமத்துல கோல்டை பற்றி ரகசியம் சொன்னது சரி. அதை விட மேலானது ஒண்ணு இருக்கு, அது தெரியுமா?

சாதுரியன்: ஓ... ரகசியம் சொன்னதை விடவா?

சத்தியன்: ஆமாம், ஏசாயா 13:12இல் புருஷனை பசும்பொன்னிலும், மனிதனை ஓப்பீரின் தங்கத்திலும் விலையேறப் பெற்றவனாய் ஆக்குவேன் என்கிறார். அதே போல செப்பனியா சொல்வதை பார்த்தால் கர்த்தருடைய கோபத்தின் நாளில் அவர்களுடைய வெள்ளியும், பொன்னும் அவர்களை தப்புவிக்கமாட்டாது என்று சொல்லுகிறார். மல்கியா கூட மனிதனைச் சுத்திகரிப்பதை பொன்னை விட மேலான காரியம் என்றுதான் சொல்கிறார். இதை தான் பேதுரு பொன்னை விட விசுவாசம் மேலானது என்று முடிக்கிறார்.

(Waiter billயை கொடுத்தான்) Billயை பார்த்தவுடன்

விஷயம்: பேசாம நாமளும் சாதுரியன் போல 400 ரூபாய் கொடுத்து நாலுபேருக்கு சோறு வேணும்னு சொல்லிருக்கலாம்.

சத்தியன்: ஏண்டா .... Billல பார் 1959/-

ரகசியம்: So, waiter டிப்ஸ் சேர்த்து 2000/- ரூபாய் ... கோல்டு ரேட் கூடினதால டிப்ஸையும் கூட்டியாச்சி.

# இரட்சிக்கப்படாதவனின் ஊழியம் -கோரேஸ் ராஜா



Rev. Daniel Gnanapragasam

OT MISSION

2nd WEEK MESSAGE

ஊழியம் என்பது கடவுள் மீது கொண்ட நம்பிக்கையைக் கொண்டு அவருடைய அழைப்பின்படி பிறருக்கு சேவை செய்து கடவுளை மகிமைப்படுத்துவதாகும். ஊழியத்தின் இறுதி வடிவம் இரட்சிப்பாகும். இரட்சிப்பு என்பது பாவம், ஆபத்து மற்றும் தீமையிலிருந்து காப்பாற்றப்படுவது (or) விடுவிக்கப்படுவதாகும். இரட்சிப்பின் செய்தி, அறிவிக்கிற நபரைச் சார்ந்தது அல்ல; அது இரட்சிப்பை அருளுகிற கடவுளைக் குறித்தது. ஏனென்றால் இரட்சிப்பின் செய்தி கடவுளின் மகத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

- **சர்வ வல்லவர்** (He is omnipotent) - God is powerful which is unlimited.
- **சர்வ ஞானமுள்ளவர்** (He is omniscient) - God's understanding has no limit, perfect in knowledge.
- **சர்வ வியாபி** (He is omnipresence) - His presence in every place and time.
- **நித்தியமானவர்** (He is eternal) - God has no beginning and no end.
- **மாறாதவர்** (He is immutable) - God is unchanging forever.

எனவே இரட்சிப்பு கர்த்தருடையது (சங். 3:8). அவரால் திட்டமிடப்பட்ட இரட்சிப்பை அவர் மட்டுமே நிறைவேற்ற முடியும். அதை செயல்படுத்த எந்த படைக்கப்பட்ட அறிவும் (or) மனித ஞானமும் அவருக்குத் தேவையில்லை. அவர் செய்கிறதைத் தடுப்பவன் யார்? (ஏசாயா 40:13, 14) அவருடைய மீட்பின் திட்டத்தை எதைக்கொண்டும், யாரைக்கொண்டும், அவருடைய நீதியின்படியும் (ஏசாயா 45:13), அவருடைய ஆலோசனையின்படியும் (ஏசாயா 46:11) நிறைவேற்றுகிறார். பாபிலோனில் 70 வருட சிறையிருப்பிற்கு பின் விடுதலைச் செய்தியை எரேமியா மூலம் உரைத்த கர்த்தர் (2 நாளா. 36:20-23), பெர்சியா ராஜாவான கோரேஸ் பிறப்பதற்கு (150 ஆண்டுகள்) முன்னமே, ஏசாயாவால் முன்னறிவித்து தம் திட்டத்தை நிறைவேற்றி (ஏசாயா 44:28) கோரேசை ஏற்படுத்தினார்.

### ஏன் இந்த முன்னறிவிப்பு?

1. அந்நிய தேசத்து மக்கள் கடவுளை அறிய வேண்டும் (ஏசாயா 45:5)
2. கடவுளின் மீட்டெடுக்கும் அன்பை இஸ்ரவேலர் உணர வேண்டும் (ஏசாயா 45:3)

### அதற்காக

i. பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் இஸ்ரவேலரை மாத்திரம் தெரிந்து கொண்ட கர்த்தர் (ஆமோஸ் 3:2). கோரேசையும் தெரிந்து கொண்டார்.

ii. யாக்கோபை அறிந்து இஸ்ரவேல் என்று நாமம் தரித்த கர்த்தர் (ஆதி. 32:28), கோரேஸ் கர்த்தரை அறியுமுன்னமே அவனுக்கும் நாமம் தரித்தார் (ஏசாயா 45:4).

**ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார். (நீதி. 21:1)**

இஸ்ரவேலரை ஒடுக்கிய எகிப்தை என் ஜனம் என்றும், இஸ்ரவேலை அடிமைப்படுத்திய அசீரியாவை என் கரத்தின் கிரியை என்றும் சொல்லும் கர்த்தர் (ஏசாயா 19:25). யூதாவை பாபிலோனுக்கு கொண்டு சென்ற நேபுகாத்நேச்சாரை "என் ஊழியக்காரன்" (எரே. 27:6) என்றும் கூறுகிறார். இவர்கள் கடவுளின் சித்தத்தின்படி, கடவுளின் சொந்த ஜனங்களை அடிமைப்படுத்தினார்கள்.

ஆனால் கோரேசோ, **"எருசலேமை நோக்கி: நீ கட்டப்படு என்றும்; தேவாலயத்தை நோக்கி: நீ அஸ்திபாரப்படு என்றும் சொல்லி, அவருக்கு பிரியமானதைச் செய்ய முன்குறிக்கப்பட்டார்" (ஏசாயா 44:28).** தன் தாத்தாவால் நாடு கடத்தலில் வாழ்ந்து ஒளியை வணங்கிக் கொண்டிருந்த கோரேஸ் ராஜா, தன்னுடைய அதிகாரத்தில் அடிமைப்பட்டு மெய்யான ஒளியின் தேவனை வணங்கிக் கொண்டிருந்த யூத ஜனங்களுக்கு விடுதலை வாழ்வை வழங்கினார் (எஸ்றா 1:1-4). அவன் எருசலேமுக்கு நற்செய்தியை அருளும் சுவிசேஷகன் (ஏசாயா 41:27). "எல்லா ஜனத்துக்கும்

மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியான இயேசு கிறிஸ்துவின் பிறப்பு செய்தி கிடைக்கப்பெற்ற மேய்ப்பனின் அடையாளத்தை கோரேசுக்கு கொடுக்கிறார்". தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்ற மேசியாத்துவ அபிஷேகத்தையும் அவனுக்குக் கொடுக்கிறார்.

## I. மேய்ப்பனின் அடையாளம்
## (Shepherd is a sign of leadership):

*I. TO PULL DOWN THE WORLD PRIDE* - தங்கள் அரணிப்பான கோட்டை மீதும், அரண்மனையைச் சுற்றி ஓடிக்கொண்டிருந்த முதலைகள் நிறைந்த கிண்டஸ் ஆறு மீதும் நம்பிக்கைக் கொண்டிருந்த பாபிலோனிய மன்னர்களின் பெருமை அநேகந்தரம் தானியேல் மூலம் எச்சரிக்கப்பட்டும் அடங்கவில்லை. இந்த பெருமை ஒரே நாள் இரவில் கோரேஸ் ராஜாவால் முடிவுக்கு வந்தது (தானி. 5:30). பாபிலோனிய சாம்ராஜ்யம் வீழ்ந்தது. அது கோரேசுக்கு முன்பாக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்த்துப்போட்டது (ஏசாயா 45:1(A)). உலக சக்தியின் பெருமை அடிபணிந்தது.

*II. TO RAISE UP THE GOD'S POWER* - யூத ஜனங்கள் திரும்ப முடியாதபடி பூட்டப்பட்டிருந்த கதவுகள், கோரேசுக்கு எந்த எதிர்ப்புகளும் இல்லாமல் உள்ளே நுழையும்படிக்கு அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாமல் திறந்து வைக்கப்பட்டிருந்தது (ஏசாயா 45:1(B)). இதனால் பாபிலோனிய அடிமை வாழ்வு சமாதானமுள்ள விடுதலை வாழ்வானது. ஆலயம் கட்டுமான பணிக்கு அடித்தளமானது.

பாபிலோனிய அடிமைத்தனம் எருசலேமையும், தேவாலயத்தையும் தீக்கிரையாக்கி அழித்தது (2 நாளா. 36:19). கர்த்தரால் கோரேசுக்கு கிடைக்கப்பெற்ற மேய்ப்பன் பட்டம் தேவாலயத்தைக் கட்ட அனுமதித்தது. உண்மையான பிரச்சனை பாபிலோனிய அடிமைத்தனம் அல்ல; அது பாவத்தினால் சிறைபிடிக்கப்படுவதே. கோரேசின் அடையாளம் நல்ல மேய்ப்பரான இயேசுவுக்கு முன்னடையாளம். அவர் மூலம் கிடைக்கிற பெரிய விடுதலையான இரட்சிப்பை ஏற்றுக்கொள்ள உலக மக்கள் அனைவரையும் தயார்ப்படுத்தவே கோரேஸ் மேய்ப்பராக தெரிந்துக் கொள்ளப்பட்டார் (யோவான் 8:36). விடுவிக்கப்படுவதன் நோக்கம், விடுதலை வாழ்வுக்கு மட்டுமல்ல; அது கடவுளின் வீடாகிய சரீரத்தை கட்டுவதற்கே (ரோமர் 6:12).

## II. அபிஷேகத்தின் அடையாளம்
## (To accomplish His will):

*I. TO BREAK DOWN THE BONDS* - அபிஷேகம், அது கடவுளின் நியமனம். இஸ்ரவேலர் தங்கள் சுதந்திரத்தையும், ஆசீர்வாதத்தையும் அணுக அபிஷேகம் அனுமதிக்கிறது. அவற்றைப் பெற்றுக்கொள்ள முன்னதாக இருக்கும் வெண்கலக் கதவுகளையும், இரும்புத் தாழ்ப்பாள்களையும் முறிக்க வேண்டும் (ஏசாயா 45:4(A)). அதற்கு பராக்கிரமம் செய்யும் கர்த்தரின் கரம் (சங். 118:15) கோரேசின் வலது கரத்தைப் பிடித்துக் கொண்டு அவனுக்கு முன்னே சென்று கோணலானவைகளைச் செவ்வையாக்கி, அவர்களுக்கு எதிரிடையாக இருந்த தடுப்புகளைத் தகர்த்துப் போட்டது (கொலே.2:14).

*II. TO RECEIVE THE GOD'S GLORY* - கடவுளின் அபிஷேகம் அந்தகாரத்தில் இருக்கும் பொக்கிஷங்களையும், ஒளிப்பிடத்தில் இருக்கிற புதையல்களையும் (ஏசாயா 45:4(B)) 70 வருடத்திற்கு பின்பு மீட்டெடுக்க வழிவகுத்தது. அது நேபுகாத்நேச்சாரால் எருசலேம் தேவாலயத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்ட தேவாலயப் பணி முட்டுகளை மகிமையாக மீட்டுக் கொடுத்தது (எஸ்றா 1:6-10).

கர்த்தரால் கோரேசுக்கு கொடுக்கப்பட்ட அபிஷேகம் கர்த்தரின் ஜனத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையும் காப்பதற்கு உதவியது. ஏதேன் தோட்டத்திலே இழந்துபோன மானுடவாழ்வு, அபிஷேகிக்கப்பட்ட ராஜாவான மேசியாவின் மூலமே மீட்டெடுக்கப்படும் (1 யோவான் 5:13). கோரேஸின் அபிஷேகம் எருசலேம் வாழ்வை மீட்டெடுத்தது. மேசியாவின் அபிஷேகமோ பரம எருசலேமின் வாழ்வை உறுதிப்படுத்துகிறது.

"*The Great Cyrus*" என்று வரலாற்றிலே அழைக்கப்பட்ட கோரேஸ் ராஜா, கடவுளின் மக்களை அடிமை வாழ்விலிருந்து விடுவிக்கும் மகத்தானப் பணியை நிறைவேற்றினார். "கோரேஸ் ராஜ்யபாரம் பண்ணும் முதலாம் வருஷமட்டும் தானியேல் அவனுடன் இருந்ததால் (தானி. 1:21) மெய்யான தேவனைப் பற்றி அறிந்து கொண்டான். "பரலோகத்தின் தேவனாகிய கர்த்தர் பூமியின் ராஜ்யங்களையெல்லாம் எனக்குத் தந்தருளினார்" (எஸ்றா 1:2). என்று சாட்சியிட்டான். தேவ ஆவியின் ஏவுதலினால் தேவனுக்குப் பிரியமான ஆலயத்தைக் கட்டுவிப்பதற்குத் தன்னை ஒப்புவித்தான்.

பிரியமானவர்களே! தேவன் நம்மை படைத்ததற்கும் ஒரு நோக்கம் உண்டு; அது அவருக்குப் பிரியமானதைச் செய்வதற்கே! ஆலயம் கட்டுவது அவருக்குப் பிரியம்; சரீரமாகிய ஆலயத்தைக் கட்டுவதும் அவருக்குப் பிரியம். விடுவிக்கப்பட்டதற்கும் ஒரு நோக்கம் உண்டு; அது விடுதலையோடு கடவுளை மகிமைப்படுத்துவதற்கே! கோரேசின் ஊழியம் இரட்சிக்கப்படாதவனின் ஊழியம் என்பதைவிட, இரட்சிப்பை அருளுகிற ஆண்டவரின் ஊழியம் என்பது தெளிவாகிறது. ஆமென்!

**IMPORTANT ANNOUNCEMENT**

**2026ஆம் ஆண்டிற்கான கேரீத் எழுத்தாளர் திட்டக்கூடுகை நவம்பர் 22 & 23 ஆகிய தேதிகளில் ஒட்டன்சத்திரத்தில் (பாச்சலூர்) நடைபெறவுள்ளது. இந்த கேரீத் இதழில் உங்கள் தாலந்துகளைப் பயன்படுத்த விரும்பினால் (தன்னார்வலராக) இக்கூடுகையில் கலந்துக்கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.**

**மேலும் விவரங்களுக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புக்கு: 94450 40148 / 93606 98617**



# ஏன் யூதர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிக்கிறார்கள்?

Mrs. Jeba Saral

**Hello Teens!** எல்லோரும் எப்படி இருக்கீங்க? நம்மில் நிறைய பேர் இஸ்ரேல் **(Israel)** போயிருக்கமாட்டோம். அதனால இந்த மாதம் வாங்க **Israel**க்கு **Virtual Tour** போயிட்டு வரலாம்! ரெடியா? அக்கா கொஞ்சம் நில்லுங்க! எதுக்கு நம்ம போறோம்னு கேட்குறீங்களா? அங்க நம்ம இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளுகிறதில்லையாமே! அதனால அத பற்றி ஒரு கள ஆய்வு நடத்தலாம்னு தான். சரி, சரி வாங்க, நாம பேசி முடிக்கிறதுக்குள்ள **Israel**லே வந்திருச்சு! எல்லாரும் **Freshup** ஆயாச்சா? இஸ்ரவேல் மக்களப்பத்தி நான் இப்போ உங்களுக்குச் சொல்லுகிறேன்.

**Israel** மக்களை நாம் **Jews** என்று அழைக்கிறோம். மற்ற கோத்திரங்கள் அண்டை நாடுகளிலும், சில கோத்திரங்கள் அழிந்து போயிருக்கலாம் என்றும் வரலாறு கூறுகிறது. இந்த **Jews** என்பவர்கள், யூதா மட்டுமல்லாமல், பென்யமீன் மற்றும் லேவி கோத்திரங்களையும் கொண்டவர்கள். இவர்களின் தலைவர்களை **'Rabbi'** என்று அழைக்கிறார்கள். மேலும் பழைய ஏற்பாட்டை **'Tenakh'** என்றும், பிதாவை **'Yeshuwa'** என்றும் கூறுகின்றனர். யூதர்கள் பழைய ஏற்பாட்டை மாத்திரம் தான் படிக்க, தியானிக்க, போதிக்க முடியும். புதிய ஏற்பாட்டைப் படிக்கக் கூடாது, அது விதிமீறல். இவ்வகையானவர்களை நாம் **'Orthodox Jews'** என்றும், இவர்களின் வழிபாட்டு முறையை **'Judaism'** என்றும் அழைக்கிறோம். **'Messionic Jews'** என்பவர்கள், தங்கள் மேசியா இயேசு தான் என்று ஏற்றுக்கொள்பவர்கள். ஆனால் யூதர்களின் பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பதால் 'கிறிஸ்தவர்கள்' என்று அழைக்கப்பட விரும்புவதில்லை.

**Atheist Jews** என்பவர்கள் "கடவுள் இல்லை" என்று கூறும் யூத குழுவினர். யூதர்களில் **'Christians'** என்னும் பிரிவினர், உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் தங்களை அடையாளம் காட்டிக்கொள்கின்றனர். என்ன அக்கா, இயேசுவும் யூதா கோத்திரம் தானே! பெத்லகேம் என்னும் சிற்றூரில் தீர்க்கதரிசனத்தின்படி பிறந்தார் அல்லவா! என்று நீங்கள் கேட்கலாம். வாங்க இப்போது இயேசுவை ஏற்றுக்கொள்ளாமலிருக்கும் காரணங்களைப் பார்க்கலாம்.

- அவர்கள் தங்களது "ரபிகள்" மற்றும் அவர்களின் பாரம்பரியங்களைத் தெய்வவாக்குப்போல பாவிப்பதால் வழிதவறுகின்றனர்.
- புதிய ஏற்பாட்டை முற்றிலும் புறக்கணித்து, அவற்றை ஏற்றுக்கொள்ளாததால், இயேசு எருசலேம் ஆலயத்தைக் கட்டாததால் மற்றும் ராஜாவாக அரசாளாததால்.
- இயேசுவை "ரபிகளில் ஒருவர்" என்ற நிலையில்தான் பாவிக்கின்றனர், மற்றப்படி "நமக்காக சிலுவையில் அறையப்பட்டார் என்றோ, "அவர் தேவனின் குமாரன்" என்றோ விசுவாசிக்க மனதில்லை. இயேசு, ரபி பொறுப்பிலிருந்து தெய்வத்துவத்திற்குப் போக முற்பட்டதால்தான் சிலுவைப்பாடு என்று நம்புகின்றனர். மேலும் துரத்துண்ட யூதர்களைக் கூட்டி சேர்க்கவில்லையாம்.
- "இயேசு மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார்" என்ற உண்மையை ஏற்பதில்லை. அவ்வாறு ஏற்பவர்கள், வேறே தேவர்களை வழிபடுபவர்கள். இவர்களை "**Lord Worshippers**" என்று கூறுகின்றனர்.
- தங்கள் யூத பூர்வீகங்களையும், **Halacha** (ஹலாகா) யூத சட்டங்கள், "**Hachem**" - "ஒரே தேவன்" என்னும் கொள்கைகளில் சிக்கியுள்ளதால்.
- "**Talmud**" - தல்மூத் என்னும் வாய்ச்சொல் சட்டங்களையும், தங்கள் பாடச்சாலைகளில் கற்றுத்தரப்படுபவைதான் உண்மை என்னும் சூழ்ச்சியில் அகப்பட்டிருப்பதால் இயேசுவை நிராகரிக்கிறார்கள்.

ஆனால் இயேசு அவர்களின் நம்பிக்கைப்படி "மேசியா"வாக

- யூதா கோத்திரத்திலும், தாவீது, ஆபிரகாம் சந்ததியிலும் பிறந்தவர் (மத். 1:1)
- இரட்சகராக பிறந்தார் (மத். 1:21)
- சமாதான பிரபுவாக (கொலோ. 1:20)
- இஸ்ரவேலருக்காக வந்தவர் (மத். 2:6)
- அவர் 100% மனிதராகவும், 100% தெய்வமாகவும் இருந்தார் (யோவான் 1:14, எபி. 4:15)

சரித்திரம் புரிஞ்சிச்சா? அடுத்த மாதம் மற்றுமொரு புதிய அனுபவத்தோடு பயணிக்கலாம். இதைப் படிக்கிற உங்கள் அனைவரையும் கர்த்தர்தாமே ஆசீர்வதிப்பாராக!

# உத்தரகாண்ட்

உத்தரகாண்ட் மாநிலம் இந்தியாவின் வடபகுதியில் அமைந்துள்ளது. சமஸ்கிருதத்தில் உத்தர்-வடக்கு, காண்ட்-பிரிவு அல்லது பகுதி என்றும் உத்தரகாண்ட் என்றால் வடக்குப் பகுதி என்றும் பொருள்படும். இம்மாநிலம் முழுவதும் இந்து கோயில்களும் புனித ஸ்தலங்களும் அதிகம் காணப்படுவதால், தேவ பூமி-கடவுளின் நிலம் என்றும் அழைக்கின்றனர். இந்துக்களால் புனிதமாகக் கருதப்படும் பத்ரிநாத், கேதர்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி ஆகிய நான்கு கோயில்களும் இங்கு அமைந்துள்ளன.

விவசாயம் இம்மாநில மக்களின் முக்கியத் தொழிலாகும். இம்மக்களின் எழுத்தறிவு விகிதம் சுமார் 78.82%. இசை இம்மக்களின் கலாச்சாரத்தின் ஒருங்கிணைந்த ஒரு பகுதி. தெய்வங்களை அழைக்கும் ஊடகமாகவும் இசை பயன்படுத்தப்படுகிறது. ஜாகர் என்பது ஆவி வழிபாட்டின் ஒரு வடிவமாகும். கடவுளின் நுழைவாயில் எனக் கருதப்படும் ஹரித்வாரில் 12 ஆண்டுகளுக்கு மூன்று முறை கும்பமேளா நடைபெறுகிறது. ஹரித்வாருக்கு அருகிலுள்ள ரிஷிகேஷ் இந்தியாவில் தலைசிறந்த யோகா மையமாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் 38 முக்கிய மகாதேவ் யாத்ரீக ஸ்தலங்கள் உள்ளன.

## நமது ஊழியம்:

ஹரியானா, ரத்தியா பணித்தளத்திலுள்ள மிரானா சபையின் ராய்சிக்கிய விசுவாசிகள் திரு. மீத்சிங் மற்றும் திரு. ஜீத்சிங் அவர்கள் இடம்மாறி உத்தரக்காண்டில் உள்ள மால்தன்சௌரில் குடியேறினர். அவர்களின் வேண்டுகோளின்படி ஜூலை 2005ஆம் ஆண்டு மண்டல செயலர் திரு. T. பொன்னுசாமி மற்றும் திரு. P.J. மனோஜ் அவர்களால் பணிக்களம் ஆய்வு செய்யப்பட்டது. 2005 அக்டோபர் 1ஆம் தேதி உத்தரகாண்டில் நைனிடால் மாவட்டத்திலுள்ள மால்தன்சௌர் என்ற இடத்தில் முதல் பணித்தளத்திற்கு முன்னோடி ஊழியர்களாக திரு. மனோஜ், திருமதி. ஜோதிமணி மனோஜ் அனுப்பப்பட்டனர்.

மோகன் நகர் பகுதியில் மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டியதால், ஆராதனைக்குழு ஒன்று அங்கு ஆரம்பிக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் தேதி கிருஷ்ணகுமார் என்ற முதல் ஆத்துமக் கனியைத் தேவன் தந்தார். அதே ஆண்டில் அவர் சுதேச ஊழியராக இணைந்து அநேகரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தினார். அவருடைய திருமணமே ஷில்பகர்ப்காடி மக்கள் இனத்தில் நடைபெற்ற முதல் கிறிஸ்தவ திருமணமாகும். மேலும் இவர் 2015ஆம் ஆண்டு முழு நேர ஊழியராக நம் இயக்கத்தில் இணைந்து, தற்போது ஜார்கண்ட் மாநிலத்தில் குடும்பமாக ஊழியம் செய்து வருகிறார்.

2008இல் கலதுஸ்கி என்ற 2வது பணித்தளத்திற்கு திரு. பால் ரவிராஜ் குடும்பம் அனுப்பப்பட்டனர். 2013 செப்டம்பரில் மிஷனெரி திரு. கிறிஸ்டியன் பிரகாஷ் குடும்பம் மால்தன்சௌரி ஊழியங்களைத் தொடர்ந்து செய்து வந்தனர். 2016இல் ஏற்பட்ட ஊழியத்தின் எதிர்ப்பினால் சிறைச்சென்று, பின் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இப்படிப்பட்ட எதிர்ப்பின் மத்தியிலும் உமர்சிங் நகர் மாவட்டத்தில் புதிய பணித்தளம் திறக்கப்பட்டது.

## நமது ஊழியத்தில் இன்று:

| | | | |
|---|---|---|---|
| ஊழியம் நடைபெறும் மாவட்டங்கள் | - 2 | மறுமலர்ச்சி பெற்றோர் | - 1534 |
| பணித்தளங்கள் | - 5 | சபைகள் | - 16 |
| மிஷனெரிகள் | - 5 குடும்பங்கள் | ஆராதனைக் குழுக்கள் | - 52 |
| சுதேச ஊழியர்கள் | - 2 | ஆலயங்கள் | - 5 |
| தன்னார்வலர் | - 1 | சந்திக்கப்படும் மக்களினங்கள் | - 14 |

## ஜெபக்குறிப்புகள்:

- புகையிலை, கஞ்சா மற்றும் மதுபானம் போன்ற தீய பழக்கங்களிலிருந்து சிறுவர், வாலிபர்கள் மற்றும் பெரியவர்கள் விடுதலை பெற
- பள்ளிகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறை நீங்க அரசாங்கம் முயற்சிகள் எடுக்க
- வேலையில்லா திண்டாட்டத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் இளைஞர்களுக்கு, ஏற்ற வேலை வாய்ப்புகளை அரசாங்கம் உருவாக்கித் தர
- கிறிஸ்தவம் ஒரு அந்நிய நாட்டு மதம் என்றும், மக்களைக் கவர்ந்து மதமாற்றம் செய்கிறார்கள் என்றும் தவறான எண்ணங்கள் மக்கள் மத்தியிலிருந்து நீங்க
- மதமாற்றத் தடைச் சட்டம் அமுலில் இருப்பதால் சுவிசேஷம் அறிவிக்க உள்ள தடைகளும், எதிர்ப்புகளும் நீங்க
- மூடநம்பிக்கை மற்றும் பலவித தெய்வ வழிபாடுகளில் சிக்கியுள்ள மலைவாழ் மக்கள் மெய்த் தெய்வத்தை அறிந்து ஏற்றுக் கொள்ள
- ஒவ்வொரு ஆண்டும் கடும் மழையினால் ஏற்படும் வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டு வரும் இம்மக்களின் பாதுகாப்பிற்காக
- புனித யாத்திரை செல்லும் மக்களின் ஆவிக்குரிய மனக் கண்கள் திறக்கப்பட்டு, இயேசுவை இரட்சகராக அறிந்து ஏற்றுக்கொள்ள
- சுதேச ஊழியர்கள் மற்றும் நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக, எதிர்ப்புகள் மத்தியிலும் இவர்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிற்க
- தனக்பூர் மற்றும் அப்சல்கர் ஆகிய இடங்களில் புதிய பணித்தளங்கள் திறக்கப்பட, அநேக சுதேச ஊழியர்கள் எழும்ப
- மோகன் நகரில் இடிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் கட்டப்பட
- இம்மாநிலத்தில் உள்ள 16,792 கிராமங்களிலும் நற்செய்தி அறிவிக்கப்பட, அங்குள்ள சுமார் 1.01 கோடி மக்களும் மறுமலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வர ஜெபியுங்கள்.

FIELD - FMPB
MRS. VASANTHI EMMANUEL



# தங்கக் குருவி
# –இந்தியா

இந்தியா என்பது தெற்காசியாவிலுள்ள ஒரு நாடாகும். இது அதிகாரப்பூர்வமாக இந்தியக் குடியரசு என்று அழைக்கப்படுகிறது. “இந்தியா” என்ற பெயர் “சிந்து” என்ற நதியிலிருந்து உருவானது. கிரேக்கர்கள் சிந்து நதியை “இந்து” என்று அழைத்ததால், அதற்கு அருகிலிருந்த நிலப்பகுதி “இண்டிகா” என அழைக்கப்பட்டது. அதுவே “இந்தியா” ஆனது. மேலும், “பாரத்” என்ற பெயர் ஜைன மதத்தின் முதல் தீர்த்தங்கரரின் மூத்த மகனான பாரத் சக்கரவர்த்தியிடமிருந்து வந்தது. மற்ற புனைப்பெயர்களில் “தங்கக் குருவி” இந்தியாவின் வரலாற்றுச் செழிப்பையும், செல்வத்தையும் பிரதிபலிக்கும் ஒரு புனைப்பெயர்.

**தலைநகரம்:** புது தில்லி

**ஆட்சி மொழிகள்:** இந்தி, ஆங்கிலம்

**அரசு:** நாடாளுமன்ற முறை, அரசியலமைப்புக் குடியரசு •

**நாணயம்:** இந்திய ரூபாய் (₹) (INR)

**GDP வளர்ச்சி விகிதம்:** 6.5% Annual change (2024) World Bank

**மக்கள் தொகை:** 145.09 கோடி (2024) சுமார் 114 கோடி இந்துக்களும், 23 கோடி முஸ்லிம்களுமாவர். மீதமுள்ளவர்கள் பிற மதங்களைச் சேர்ந்தவர்கள்.

**புவியியல்:** பரப்பளவு அடிப்படையில் உலகின் ஏழாவது மிகப் பெரிய நாடும், மக்கள் தொகையின் அடிப்படையில் உலகில் முதலாம் இடத்தைக் கொண்ட நாடுமாகும். இதற்குத் தெற்கே இந்தியப் பெருங்கடலும், தென் மேற்கே அரபிக்கடலும், தென் கிழக்கே வங்காள விரிகுடாவும் சூழ்ந்துள்ளன. மேற்கே பாகிஸ்தான், வடக்கே சீனா, நேபாளம், மற்றும் பூட்டான், கிழக்கே வங்காளதேசம் மற்றும் மியான்மர் ஆகியவற்றுடன் நில எல்லைகளை இது பகிர்ந்துக் கொண்டுள்ளது. இந்தியப் பெருங்கடலில் இலங்கை மற்றும் மாலத்தீவுக்கு அருகில் இந்தியா அமைந்துள்ளது. இந்தியாவின் ஒரு பகுதியான அந்தமான் நிக்கோபார் தீவுகளான தாய்லாந்து, மியான்மர் மற்றும் இந்தோனேசியாவுடன் கடல் எல்லையைப் பகிர்ந்து கொள்கின்றன.

1757ஆம் ஆண்டு பிளாசி போருடன் இந்தியாவின் பிரிட்டிஷ் காலனித்துவம் தொடங்கியது, அப்போது கிழக்கிந்திய கம்பெனி வங்காளத்தின் மீது குறிப்பிடத்தக்க அதிகாரத்தைப் பெற்றது. பிரிட்டிஷ் ராஜ்ஜியம் என்று அழைக்கப்படும் பிரிட்டிஷ் மகுடத்தின் நேரடி ஆட்சி, 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெறும் வரை நீடித்தது. பிரிட்டன் கிழக்கிந்திய நிறுவனத்தின் ஆட்சியானது, இந்தியாவை ஒரு குடியேற்றப் பொருளாதாரமாக மாற்றியது. இந்தியா 1950ஆம் ஆண்டு முதல் ஒரு கூட்டமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட குடியரசாக உள்ளது. ஒரு ஜனநாயக நாடாளுமன்ற முறை மூலமாக நிர்வகிக்கப்படுகிறது. 1947இல் இதன் விடுதலை நேரத்தில் இருந்து உலகின் மிக அதிக மக்கள் தொகையுடைய ஜனநாயக நாடாகத் திகழ்கிறது.

இந்தியர்களின் முன்னேற்றத்திற்காக பல காலகட்டங்களில், பல துறைகளில் சேவை புரிய, பல தேசங்களிலிருந்து கிறிஸ்தவ மிஷனெரிகள் வருகை தந்து, சமூக முன்னேற்றப் பணியாற்றி இத்தேசத்தைத் தங்கள் தேசமாகக் கருதி, தங்கள் முதிர்வயதில் தாய்த் தேசம் திரும்பிய சிலரும் உண்டு, இந்த இந்திய மண்ணில் இரத்த சாட்சிகளாக மரித்து, இங்கேயே புதைக்கப்பட்ட பலரும் உண்டு.

ஏராளமான மிஷனெரிகளின் உதவியால் இன்று கல்வி, மருத்துவம், சமூக முன்னேற்றம் போன்ற வளர்ச்சிகளை நாம் கண்டுள்ளோம். அவர்களுள் சிலர் - ஜான் ஆண்டர்சன், வில்லியம் மில்லர், ராபர்ட் கால்டுவெல், ஏமி கார்மைக்கேல், வில்லியம் கேரி, அலெக்சாண்டர் டஃப், சாம் ஹிக்கின்பாட்டம், சார்லஸ் தியோபிலஸ் ஈவால்ட் ரேனியஸ், ஜார்ஜ் உஃலோ போப், வில்லியம் தோபியாசு, ரிங்கல் தோபே, ஐடா ஸ்கடர், கிரகாம் ஸ்டுவர்ட் ஸ்டேன்ஸ், கிறிஸ்டியன் பிரடெரிக் ஸ்சுவார்ட், ஹென்றி கான்ஸ்டன்டைன் ஹாக்ஸ்டபிள், பர்த்தலோமேயு சீகன்பால்க், ராபர்ட் குக், பெஞ்சமின் ஹென்றி ஆர்தர் மார்கோஸ்கிஸ், ஈடித் மேரி பிரவுன், வில்லியம் கௌடி போன்ற பலர் இந்தியாவின் பல மூலைகளிலுள்ள கிராமங்களில் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் திருச்சபைகள் போன்றவை உருவாகக் காரணமாக இருந்தவர்கள்.

**ஜெபக்குறிப்பு:**

- ✦ இந்திய தேசம் மதச்சார்பின்மைக் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்க ஜெபிப்போம்.
- ✦ இந்தியாவிலுள்ள திருச்சபைகள் கலாச்சாரம் கடந்த சபை நாட்டும் பணியில் ஈடுபட, அது நமது தமிழ்நாட்டில் அதிகரிக்க ஜெபிப்போம்.
- ✦ தமிழ்நாட்டு சபைகள் இளைஞர்களை இந்திய தேசமெங்கும் மிஷனெரிகளாய் அனுப்ப கருத்தோடு ஜெபிப்போம்.



Ms. Beulah Baskar

மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

# Rev.P. அன்பையா

கன்னியாகுமரி மாவட்டம், வாட்ஸ்புரம் என்ற கிராமத்தில் 1961ஆம் ஆண்டு கிறிஸ்தவ பெற்றோருக்கு 7வது மகனாகப் பிறந்து, கிறிஸ்தவ ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டேன்.

### பூர்வீகம்:

படிப்பு முடிந்து, கோயம்புத்தூர் தனியார் நிறுவனத்தில் பணி செய்து கொண்டிருந்தேன். வாலிப வயதில் சந்தோஷமான வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு, உலகத்தின் கவர்ச்சிக்கு அடிமைப்பட்டு, பெற்றோரை ஏமாற்றி, நல்லவனாக நடித்து வந்தேன். விடுமுறையில் சொந்த ஊருக்கு வந்தபோது, திருச்சபையில் நடைபெற்ற சிறப்பு கூடுகையில் எனது மறைமுகமான பாவ வாழ்க்கையானது உணர்த்தப்பட்டு, மனம் கசந்து அழுதேன். என்னை முழுவதுமாக இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்ததினால் வந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை அனுபவித்து, கிறிஸ்துவுக்காக வாழத் தீர்மானித்தேன்.
எனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு, திருச்சபையின் ஊழியங்களில் செயல்பட ஆரம்பித்தேன். 1988ஆம் ஆண்டு ஊழிய அழைப்பைப் பெற்று, அருள்மேரியை எனது வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு திருச்சபையின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்து வந்தேன்.

### மிஷனெரிப் பணி அழைப்பு:

திட்டுவிளை, காலம் சென்ற Dr. செல்வராஜ் அவர்களாலும், நமது மூத்த மிஷனெரி Rev. சோபிதசிங் மற்றும் திருமதி. ஞானசெல்வம் சோபிதசிங் அவர்களாலும் வட மாநிலங்களில் FMPBயின் ஆத்தும ஆதாய ஊழியங்களைப் பற்றி அறிந்து, குடும்பமாய் 1989ஆம் ஆண்டு FMPBயில் இணைந்தோம்.

### வட இந்திய மிஷனெரிப் பணி:

சேலம், பெத்தேல் வேதாகமக் கல்லூரியில் பயிற்சியும், உத்திரபிரதேசம் ஹோண்டாவில் ஹிந்தி பயிற்சியும் முடித்து, மஹாராஷ்டிரா மாநிலம் ராஜுரா (இன்றைய கட்சாந்தூர்) பணித்தளத்தில் கோண்ட் இன மக்கள் மத்தியில் முன்னோடி மிஷனெரியாக பணிச் செய்து கொண்டிருந்தோம். 1992ஆம் ஆண்டு எனது மகள் ஆக்னெஸ் சிலெசரின் சுகவீனத்தினால் சிகிச்சைக்காக சென்னை வந்து தலைமைச் செயலகத்தில் பணியைத் தொடர்ந்து, 2005ஆம் ஆண்டு வரை நிதித்துறையில் பல நிலைகளில் ஊழியம் செய்து வந்தோம்.

### தென்னிந்திய மிஷனெரிப் பணி:

விருதுநகர் மாவட்டம், தென் நெல்லை பிராந்தியம், மார்த்தாண்டம் பிராந்தியம், தற்போது கரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பணியாற்றி வருகிறோம். பல அனுபவங்களைத் தேவன் கற்றுத் தருகிறார். குறிப்பாக வாலிபர்கள் கிறிஸ்துவுக்காய் வைராக்கியமாய் எழும்பி, சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே என்ற இலட்சியத்தோடு கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றும் செயல் வீரர்களாய், விடுதலையளிக்கும் சுவிசேஷத்தை அறியாத மக்களுக்கு அறிவிக்க புறப்பட்டு செல்ல வேண்டும் என்ற வாஞ்சையோடு செயல்படுகிறோம்.

### ஜெபியுங்கள் :

- ★ எனது மூத்த மகள் ஆக்னெஸ் சிலெசரின் சரீர சுகத்திற்காகவும்...
- ★ இளைய மகளின் குடும்ப வாழ்க்கை ஆசீர்வதிக்கப்படவும்...
- ★ என் மனைவிக்கு மூட்டு வலியிலிருந்து பூரண சுகம் கிடைக்கவும்...
- ★ எங்கள் ஊழியம் நல்ல பலன் தரவும், இதன் தொடரோட்டம் ஜெயமாய் முடியவும் ஜெபியுங்கள்.



REV. T.Y.P. ASIR



# செவித்திறன் குறைபாடு



Mrs & Mr. Godwin

பெரும்பாலும் காதையும், மூளையையும் இணைக்கும் நரம்புகளில் ஏதாவது கோளாறு ஏற்படும் போது செவித்திறன் குறைபாடு ஏற்படுகிறது. ஒருவருக்கு சத்தங்களைக் கேட்பது, பேச்சைப் புரிந்துகொள்வது அல்லது சுற்றியுள்ள ஒலிகளைக் கவனிப்பது கடினமாகிறது. சிலருக்கு சிறிதளவு செவித்திறன் குறைபாடு இருக்கலாம், வேறுசிலர் முற்றிலும் கேட்க முடியாமல் இருக்கலாம் (காது கேளாமை). இது பிறப்பிலேயே இருக்கலாம் அல்லது அவர்களுடைய வாழ்க்கையில் பிற்பகுதியில் ஏற்படலாம்.

### காது கேளாமைக்கான பொதுவான காரணங்கள்:

- பிறப்புக் கோளாறுகள் (முன்கூட்டிய பிறப்பு, குறைந்த எடை பிறப்பு)
- காதில் நோய்த்தொற்றுகள்
- காயங்கள்
- காது நரம்புக்கு தீங்கு விளைவிக்கும் மருந்துகள் (ஓடோடாக்ஸிக் மருந்துகள்)
- உரத்த சத்தம்
- வயதான அல்லது குடும்பப் பின்னணி

செவித்திறன் இழப்பு உள்ள குழந்தைகளுக்குப் பேசுவதில், தொடர்புகொள்வதில், கற்றுக்கொள்வதில் சிரமம் இருக்கலாம். செவித்திறன் குறைபாடு பெரும்பாலும் ஒரு செவித்திறன் நிபுணரால் (ஆடியாலஜிஸ்ட்) கண்டறியப்படுகிறது. காது பரிசோதனை, ஆடியோமெட்ரி (இந்த சோதனை ஒரு நபரின் வெவ்வேறு ஒலிகள், பிட்ச்கள் மற்றும் அதிர்வெண்கள் கேட்கும் திறனை அளவிடுகிறது மற்றும் செவித்திறன் இழப்பைக் கண்டறிந்து மதிப்பீடு செய்கிறது) அல்லது டிம்பனோமெட்ரி (காற்று அழுத்தத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு பதிலளிக்கும் வகையில் காதுகுழாய் எவ்வளவு நன்றாக நகர்கிறது என்பதை அளவிடுவதின் மூலம் காதுகளின் ஆரோக்கியம் மற்றும் செயல்பாட்டை மதிப்பிடுகிறது) மூலம் கண்டறியப்படுகிறது.

### சிகிச்சைகள்:

கேட்கும் கருவிகள் (HEARING AIDS), கோக்லியர் உள்வைப்புகள் (COCHLEAR IMPLANTS), பேச்சு சிகிச்சை (SPEECH THERAPY), சைகை மொழி (SIGN LANGUAGE) மற்றும் காது கேட்கும் கருவிகள் (ASSISTIVE LISTENING DEVICES).

### புள்ளிவிவரங்கள்:

- 2011ஆம் ஆண்டு தமிழ்நாட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையில் ஊனமுற்றோர் எண்ணிக்கை 1,179,963 ஆகும், இது மொத்த மக்கள்தொகையில் 1.635% ஆகும்
- தமிழ்நாட்டில், செவித்திறன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 19% ஆகும், எனவே குறைபாடுடைய நபர்களிடையே, செவித்திறன் இழப்பு ஒரு முக்கிய அங்கமாகும்.
- தமிழ்நாட்டில் கிராமப்புற கடலோர பகுதிகளில், 5,621 பேரில் 232 (4.1%) பேர் தாங்கள் கேட்க முடியாதவர்களாக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.
- அதில் 77.6% பேர் வயது மூப்பு அல்லது காரணமறியாத காரணங்களைக் கூறினர்.
- வயதுக்கேற்ப செவித்திறன் குறைபாடு அதிகமாகிறது (1.5% முதல் 11.3% வரை).
- கிராமப்புறங்களில் நகரப் பகுதிகளைவிட கேள்வி குறைபாடு அதிகம் உள்ளது.

*“செவிடர் கேட்கவும், ஊமையர் பேசவும் பண்ணுகிறார்” – மாற்கு 7:37*

### ஜெபக்குறிப்புகள்:

- செவித்திறன் குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த சிகிச்சை கிடைத்து சுகம் பெற
- இந்தக் குறைபாடு உள்ளவர்களுக்கு தேவன் சமாதானம், அன்பு, ஏற்றுக்கொள்ளக்கூடிய திறனைக் கொடுக்க
- மருத்துவர்கள், ஆடியாலஜிஸ்ட், பயிற்றுவிப்பாளர்கள் தங்களுடைய திறமைகள் மற்றும் ஞானத்தைக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ
- கேட்கும் கருவிகள் மற்றும் சிகிச்சைகள், செலவு செய்ய முடியாதோர் மற்றும் கிராமப்புற மக்களுக்கு எளிதாகக் கிடைக்க
- செவித்திறன் குறைபாடுடையவர்களைத் தாங்கும் குடும்ப உறுப்பினர்களுக்கு பொறுமை, புரிதல் மற்றும் ஞானம் கிடைக்க
- ஆலயங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வேலைத்தளங்கள் போன்ற இடங்களில் இவர்கள் சமமாக மதிக்கப்பட ஜெபிப்போம்.




# 5G அப்டேட் மோசடி
# 5G UPDATE SCAM

Ms. Lily Reaiah Grace



ஒவ்வொரு புதிய தலைமுறையினரும் அதன் முன்னோடிகளின் சிறந்த குணங்களைத் தக்கவைத்து, மேம்படுத்தி, முந்தைய தலைமுறைகளால் முடியாத சவால்களுக்கு பதில்களைக் கண்டறிந்து, செழித்து வளர்வது இயல்பு. இது தலைமுறை மொபைல் நெட்வொர்க்கிங் மற்றும் செல்லுலார் தொழில்நுட்பத்திற்கும் பொருந்தும்.

மொபைல் நெட்வொர்க்கிங்கின் சமீபத்திய தலைமுறையான 5Gஇன் நெட்வொர்க், 4Gஇன் திறன் மற்றும் இலக்குகளை மீறுகிறது. 4Gஐ விட 100 மடங்கு வேகமாக, பொதுவாக 1 GBPS வரை, மேலும் AI பயன்பாடுகள் மற்றும் எட்ஜ் கம்ப்யூட்டிங் போன்ற மேம்பட்ட பயன்பாட்டு நிகழ்வுகளை ஆதரிக்க உதவுகிறது. இந்த 5G நெட்வொர்க்கை பயன்படுத்தி சமீபத்தில், இந்தியாவில் “5G அப்டேட் மோசடி” மற்றும் “5G டவர் நிறுவல் மோசடி” என இரண்டு முக்கியமான நிதி மோசடிகள் பரவி வருகின்றன. இந்த மோசடியில், மோசடி செய்பவர்கள் ஒருவரின் சிம் கார்டை 5Gக்கு மேம்படுத்துவதாகக் கூறி, அவரின் தனிப்பட்ட மற்றும் நிதி விவரங்களைத் திருட முயற்சிக்கிறார்கள். ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொற்கள் (PASSWORD), OTP மற்றும் வங்கி விவரங்கள் போன்றவற்றைத் தெரிந்துகொள்வதே இவர்களின் நோக்கம்.

### மோசடி நடக்கும் விதம்:

- ஆள்மாறாட்டம்: மோசடி செய்பவர்கள் ஒருவரை ஒரு தொலைத்தொடர்பு நிறுவனத்திலிருந்து அழைப்பதாகவோ அல்லது செய்தி அனுப்புவதாகவோ கூறி, 4G சிம்மை 5Gக்கு மாற்ற உதவுவதாகச் சொல்வார்கள்.
- விவரங்கள் கோருதல்: அவர்கள் உங்களை ஒரு “செயல்முறை” மூலம் வழிநடத்தி, அதில் ஒருவரின் வங்கி கணக்கு எண், கடவுச்சொற்கள் (PASSWORD), OTP போன்ற தனிப்பட்ட தகவல்களைப் பெறுவார்கள்.
- தீங்கிழைக்கும் இணைப்புகள் (MALICIOUS LINKS): அவர்கள் SMS, WHATSAPP மூலமாக போலியான இணைப்புகளை அனுப்பி அதை ஒருவர் கிளிக் செய்தால், அவரின் சாதனத்திற்குத் தீங்கு விளைவிக்கலாம் அல்லது தகவல்களைத் திருடலாம்.
- நேரடித் திருட்டு: ஒருவரின் OTP கிடைத்தவுடன், அவர்கள் அவரின் வங்கிக் கணக்கை அணுகி பணத்தைத் திருடிவிடுவார்கள்.
- பாதுகாத்துக் கொள்ள சில வழிகள்:
- 5G சேவையைச் செயல்படுத்த தொலைத்தொடர்பு நிறுவனங்கள் ஒருபோதும் OTP கேட்க மாட்டார்கள். OTPஐ ஒருபோதும் பகிராதீர்கள்.
- 5G மேம்பாடுகளைப் பற்றி வரும் கோரப்படாத அழைப்புகள் அல்லது செய்திகளைச் ஸ்பேம் (SPAM) ஆக கருதுங்கள். குறிப்பாக தனிப்பட்ட தகவல்களைக் கேட்கும் போது கவனமாக இருங்கள்.
- 5G மேம்பாடு தொடர்பான SMS, WHATSAPP இணைப்புகளைக் கிளிக் செய்வதைத் தவிர்க்கவும்.
- 5G சேவை பற்றிய துல்லியமான தகவல்களை அறிய, அதிகாரப்பூர்வ வலைத்தளங்களைப் பார்க்கவும் அல்லது வாடிக்கையாளர் சேவையை (CUSTOMER SERVICE) நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
- உங்களின் ஆன்லைன் கணக்குகளுக்கு கூடுதல் பாதுகாப்பிற்காக TWO-FACTOR AUTHENTICATIONஐ அவசியம் பயன்படுத்துங்கள்.

### 5G டவர் நிறுவல் மோசடி:

இந்த மோசடியில், இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தில் (TRAI) இருந்து கடிதம் வந்ததாக சொல்லி, தனியார் நிலங்களில் 5G மொபைல் டவர்களை நிறுவ அனுமதிப்பதாக ஏமாற்றுகிறார்கள்.

### மோசடி நடக்கும் விதம்:

மோசடி செய்பவர்கள், அரசு முத்திரைகள், லெட்டர்ஹெட்கள் மற்றும் போலியான கையொப்பங்கள் கொண்ட போலியான கடிதங்களை நில உரிமையாளர்களுக்கு அனுப்புவார்கள். அல்லது “உங்கள் நிலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது; ஆவணங்களை 48 மணி நேரத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்” போன்ற அவசர உணர்வை ஏற்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களை விரைவாக இணங்கச் செய்வார்கள். அல்லது டவர் நிறுவலுக்கு அனுமதி பெறுவதற்காகப் பணம் செலுத்தச் சொல்வது மற்றும் ஒருவரின் நிலப் பத்திரங்கள் மற்றும் அடையாள அட்டைகளையும் கேட்பார்கள். இதன் ஆபத்து, சிலர் தங்கள் பணத்தை இழப்பதும், ஆள் திருட்டுக்கு உள்ளாவதுமாகவும் (IDENTITY THEFT) உள்ளது, ஒருவரின் நிலப் பத்திரங்கள் மற்றும் அடையாள அட்டைகள் தவறான கைகளில் சென்று, பல வழிகளில் துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

### பாதுகாத்துக் கொள்ள குறிப்புகள்:

- TRAI டவர் நிறுவலுக்கு நிலங்களை அங்கீகரிப்பது இல்லை.
- தகவல்களை சரிபார்க்காமல் தனிப்பட்ட அல்லது நிலம் தொடர்பான ஆவணங்களைப் பகிராதீர்கள்.
- அவசரமாகச் சமர்ப்பிக்கும்படி அல்லது பணம் செலுத்தும்படிக் கோரும் கடிதங்களைப் புறக்கணிக்கவும்.
- அதிகாரப்பூர்வ அரசு இணையதளங்கள் மூலம் அல்லது தொலைத்தொடர்பு நிறுவனங்களை நேரடியாகத் தொடர்புகொண்டு தகவல்களைச் சரிபார்க்கவும்.
- இதுபோன்ற மோசடிகளை CYBERCRIME.GOV.IN அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகாரளிக்கவும்.

### ஜெபக் குறிப்புகள்:

- ✦ மோசடி செய்பவர்களாகவும், ஏமாற்றுபவர்களாகவும் வாழத் தேர்ந்தெடுக்கப்படும் நமது சமூகத்தின் இளைஞர்கள் மனந்திரும்பி, கௌரவமான வாழ்க்கை வாழ
- ✦ மக்கள் இப்படிப்பட்ட மோசடிகளுக்கு இரையாகாமல் ஞானத்தோடும், விழிப்போடும், ஜாக்கிரதையோடும் நடந்துக் கொள்ள
- ✦ பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் இழப்புகளிருந்து மீள, இழந்ததை திருப்பிக்கொள்ள
- ✦ காவல்துறை, சைபர் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொறுப்பிலிருப்போர் விரைவாக, ஞானத்தோடு, நியாயமாக செயல்பட
- ✦ நெட்வொர்க்கிங், செல்லுலார் தொழில்நுட்ப சேவைகள் மற்றும் நிறுவனங்களின் விதிமுறைகள் நம் தேசத்தில் பலப்படுத்தப் பட ஜெபிப்போம்.

# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

## (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)



கெலமங்கலம் திருச்சபை

# கெலமங்கலம் திருச்சபை வரலாறு

தேன்கனிக்கோட்டை பிராந்தியத்திலுள்ள கிராமங்களில் ஆரம்ப நாட்களில் கெலமங்கலம், அனுசோனை, பேவநத்தம் மற்றும் சினிகிரிபள்ளி ஆகிய இடங்களில் மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் கிராமம் கிராமமாக சென்று நற்செய்தி அறிவித்தனர். முதல் ஊழியராக அருட்திரு. தாமஸ் அண்ணன் 1980இல் இப்பகுதியில் ஊழியத்தை ஆரம்பித்தார். வாய்ப்புள்ள இடங்களில் ஜெபக்கூடுகை நடந்துக் கொண்டிருந்தது. ராமப்பா, வேணுகோபால் இவர்களை முதல் விசுவாசிகளாகக் கர்த்தர் கொடுத்தார். இதில் ராமப்பாவின் தாயார் பிசாசு பிடியினால் பாதிக்கப்பட்டு 20 வருடங்களாக படுத்த படுக்கையாக இருந்தார்கள். நமது ஊழியர் தாமஸ் அண்ணன் மற்றும் சில சுதேச ஊழியர்கள் அவருடைய வீட்டிற்கு சென்று நற்செய்தி அறிவித்து பாரத்தோடு ஜெபித்து வந்தார்கள். அடுத்த நாள் காலையில் அந்த தாயார் (இருளம்மா) நடக்கவும், வேலை செய்யவும் கர்த்தர் கிருபைச் செய்தார். அன்று முதல் ராமப்பா அவர்கள் வீட்டில் ஜெபம் ஆரம்பிக்கப்பட்டது. ஆங்காங்கே வீடுகளில் ஆராதனை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அதன் பின்பு பல போராட்டங்களுக்குப் பிறகு அருட்திரு. நாகராஜ் ஊழியர் ராமப்பா மூலம் ஆலயத்திற்கு இடம் வாங்கப்பட்டது. கர்த்தரின் கிருபையால் 1983இல் ஆலயம் கட்டப்பட்டது. தொடர்ந்து திரு. தர்மமணி, அருட்திரு. ஜேக்கப் லகுமப்பா, கனம். ஆண்ட்ரூ ராமப்பா மற்றும் முதல் விசுவாசி வேணுகோபால் இவர்கள் மூலம் நற்செய்தி வேகமாக அறிவிக்கப்பட்டதன் விளைவாக கர்த்தர் அனுதினமும் ஆத்துமாக்களைத் தேவ ராஜ்யத்தில் இணைத்தார். ஒவ்வொரு வாரமும் திருமுழுக்கு நடைபெற்றது.

கனம். குப்புசாமி அண்ணன் அவர்கள் 2002ஆம் ஆண்டு ஜெக்கேரி கிராமத்தில் குழு ஊழியம் செய்து முடித்து இரவு 7 மணிக்கு வீடு திரும்பும் போது, அந்த ஊர் மக்கள் ஒன்று திரண்டு ஊழியர் குடும்பத்தை பிடித்து, தகாத வார்த்தைகளினால் திட்டி, மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து விடுவோம் என்று கூறி அடித்தனர். மேலும் அருகிலுள்ள இந்து கோயிலுக்கு அழைத்துச் சென்று விபூதி பூசி, கற்பூரம் கொளுத்தி அதன் நாமத்தை சொல்லி வழிபடு என்று கட்டாயப்படுத்தி மிரட்டினர். ஊழியர் வைராக்கியமாய் இருந்ததினால் இரவு 12 மணி வரைக்கும் கொடுமைப்படுத்தினர். வெளியே சென்றிருந்த ஊர் தலைவர் வந்தபின்பு ஊழியரை அடித்து, எச்சரித்து விடுவித்தனர். மூன்று மாதம் வரைக்கும் அந்தப் பகுதியில் ஊழியம் செய்ய முடியவில்லை. பிறகு சிறிது நாட்களில் ஊழியரை அடித்த முக்கிய நபர்கள் ஊரைவிட்டே ஓடிவிட்டனர். இப்பொழுது கர்த்தரின் கிருபையால் அந்த பகுதியில் தொடர்ந்து ஊழியம் நடைபெற்றது. தற்சமயம் அந்த கிராமத்தில் 10 விசுவாசக் குடும்பங்களும், சிறுவர் ஊழியம் (25 பேர்) நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பின்பு கனம். சின்னசாமி, கனம். சாலமோன் சங்கர், கனம். சைமன் பீட்டர் இவர்கள் மூலமாக நடந்த ஊழியத்தின் நிமித்தமாக ஆங்காங்கே ஆலயங்கள் கட்டப்பட்டது.

### துதிக்க:


- தற்சமயம் கனம். சார்லஸ் பின்னி அவர்கள் குடும்பமாக 26 கிராமங்களை மையமாகக் கொண்டு ஊழியத்தைச் செய்து வருகிறார்கள்.
- 6 இடங்களில் சிறுவர் ஊழியமும், ஒவ்வொரு வாரமும் இரவுக் கூட்டங்களும், குழு ஊழியங்களும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

### ஜெபிக்க:

- அநேக விசுவாசக் குடும்பங்களும், ஊழியங்களும் பெருக
- ஊழியம் தடையில்லாமல் நடைபெற
- விசுவாசிகள் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்ப
- வாலிபர்கள் ஊழியத்தைச் செய்ய முன்வர ஜெபியுங்கள்.


# ஜெபிக்கலாம் வா...


## VIRAL NEWS




### தேசத்தில் ஊடுருவும் தீவிரவாதம்

- தேசத்தில் காணப்படும் தீவிரவாத மற்றும் மதவாத சக்திகள் ஒழிய ஜெபிப்போம்.
- தீவிரவாத எண்ணங்களை உடைய மனிதர்கள் மனம் மாறி, அவர்கள் கிறிஸ்துவின் அன்பைப் பெற்று வாழ ஜெபிப்போம்.




### கைவிடப்படும் பிறந்த குழந்தைகள்

- கைவிடப்பட்ட பிறந்த குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க, அவர்களுக்கு அன்பும், பராமரிப்பும் கிடைக்க ஜெபிப்போம்.
- பெண் குழந்தைகளின் மீது கொடூரமான மனப்பான்மையுடன் இருக்கும் பெற்றோர் மனம் மாற, அவர்கள் குழந்தைகளை தேவன் அளித்த அருமையான வரமாகக் காண, விழிப்புணர்வு ஏற்பட்டு அன்பும், மதிப்பும் ஏற்பட ஜெபிப்போம்.




Midnight Rescue: Mumbai Police's Nirbhaya Squad Saves Abandoned Newborn

### சாலை விபத்தால் ஏற்படும் இழப்புகள்

- இந்த பேருந்து விபத்துகளில் உயிரிழந்த மக்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கிடைக்க, அவர்கள் வாழ்க்கையில் தேவனின் வழி நடத்துதலுக்காக ஜெபிப்போம்.
- சாலைகளில் தேவ பாதுகாப்பு இருக்க, ஓட்டுநர்கள் கவனம் சிதறாமல் வாகனங்களை இயக்க, விபத்துகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க ஜெபிப்போம்.




### உணவுப் பொருட்களில் கலப்படம்

உணவுப் பொருட்களில் நடைபெறும் கலப்படம் தடுக்கப்பட, உணவுத் தயாரிப்பாளர்களும், விற்பனையாளர்களும் தேவ பயத்துடன் நேர்மையாக செயல்பட, மக்கள் பாதுகாப்பான உணவுகளைப் பெற, மக்களுக்கு உணவின் தூய்மையைப் பற்றியதான விழிப்புணர்வு ஏற்பட ஜெபிப்போம்.

### மருந்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள்

காஃப்சிரப்பினால் உயிரிழந்த 20 குழந்தைகளின் குடும்பங்களுக்கு தேவன் ஆறுதலை அளிக்க, மருந்துகள் தேவையான தரத்துடன் தயாரிக்கப்பட, மருத்துவ நிறுவனங்கள் பொறுப்புடன் செயல்பட, தவறான மருந்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் தடுக்கப்பட, மக்கள் பாதுகாப்பான மருந்துகளை மட்டுமே பயன்படுத்த ஜெபிப்போம்



The death toll after a massive stampede-like situation at Tamil actor-politician Vijay's rally at Karur in Tamil Nadu rose to 41.

### சுட்ட நெரிசலில் சிக்கி உயிரிழப்பு

- மக்கள் விழிப்புணர்வின்றி, கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த இந்த துயரமான சூழ்நிலையில் தேவன் அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதலை அளிக்க ஜெபிப்போம்.
- மக்கள் மனதில் விழிப்புணர்வும், பொறுப்பும் வர, தேவன் அவர்களை வெளிச்சத்திற்குள் நடத்த ஜெபிப்போம்.

MR. R. GEORGE DANIEL

தீமோத்தேயுவின் கூடாரம்

TIMOTHY'S TENT

# தலைமைத்துவ பயிற்சி முகாம்

**தலைமைத்துவ பயிற்சியின் ஓர் கண்ணோட்டம்:**

நம்மை நேசிக்கிற இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவுக்கே எல்லாப் புகழும் மகிமையும் உண்டாவதாக! பூண்டியில் நடைபெற்ற *Timothy's Tent* (தீமோத்தேயுவின் கூடாரம்) என்ற தலைமைத்துவ பயிற்சி முகாமில், அவரது ஜீவனுள்ள வார்த்தையை எனக்கு மிகுதியாகக் கொடுத்து ஆசீர்வதித்ததற்காக தேவனுக்கு நன்றி கூறுகிறேன். நான் FMPBஇல் ஜெபக்குழு தலைவராகவும், இளைஞர் தன்னார்வலராகவும் (*Youth Volunteer*) இணைந்துள்ளேன். இது நான் கலந்துகொண்ட முகாம்களிலேயே எனக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய பயிற்சி முகாமாக இருந்தது.

இந்தப் பயிற்சியின் தாக்கம் அதிகமாக இருந்ததற்கு முக்கியக் காரணம், குழு கலந்துரையாடல்கள் மற்றும் ஆழமான சிந்தனைகளை உள்ளடக்கிய பகிர்வுகளும் ஆகும். அந்த நாட்களில், பின்வரும் தொடர்ச்சியான பாடங்கள் மூலம் ஆழமான வேதாகம சத்தியங்களை நான் கற்றுக்கொண்டேன்:

- இரட்சிப்பின் நிச்சயம் (*Assurance of Salvation*)
- அமைதி நேரம் (*Quiet Time*)
- ஆவிக்குரிய போராட்டம் (*Spiritual Warfare*)
- வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை (*A Successful Christian Life*)
- பரிசுத்த ஆவியானவர் (*Holy Spirit*)
- கிறிஸ்துவுக்குள் நம்முடைய அடையாளம் (*Our Identity is in Christ*)
- பகுத்தறிதல் மூலம் வேதாகமப் படிப்பு (*Inductive Bible Study*)
- சுவிசேஷம் அறிவித்தல் (*Evangelism*)
- நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வரலாறு (*History of FMPB*)

முதல் நான்கு தலைப்புகளும் எனக்கு ஏற்கனவே பரிச்சயமாகியிருந்தாலும் Rev. ராஜன் அங்கிள் மற்றும் திருமதி. கிறிஸ்டி ராஜன் Aunty அவற்றை அதிக ஊக்கத்தோடும், எளிய எடுத்துக்காட்டுகளுடனும் கற்பித்தது எனக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. மேலும் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் பற்றிய தெளிவும், நீண்ட நாட்களாக என் மனதில் இருந்த ஒரு கேள்விக்கும் பதில் கிடைத்தது. திரு. நத்தானியேல் எட்வர்ட் அங்கிள் எடுத்த கிறிஸ்துவுக்குள் நம்முடைய அடையாளம் பற்றிய பகிர்வு, கிறிஸ்து கொடுத்த உயர் அழைப்பின்படி வாழ கலந்துக் கொண்ட ஒவ்வொரு வாலிபர்களுக்கும் சவால் விடுத்தது.

நான் இதற்கு முன்பு SPECS முறை போன்ற பல்வேறு வேதாகமப் படிப்பு முறைகளைப் பற்றிக் கற்றுக்கொண்டிருந்தாலும், பகுத்தறிதல் மூலம் வேதாகமப் படிப்பு (*Inductive Bible Study*) முறை இக்காலத்தின் முக்கியமான தேவை என்பதை நிரூபித்தது. இது ஆழமானதாகவும், கட்டமைக்கப்பட்டதாகவும், உண்மைகளை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருந்தது. மேலும் நன்கு அறியப்பட்ட வசனப்பகுதிகளுக்கு ஒரு புதிய கண்ணோட்டத்தையும் அளித்தது. ஒவ்வொரு வேதாகம வசனத்தையும் வரி வரியாகவும், வார்த்தை வார்த்தையாகவும் எப்படி கவனமாக வாசித்து விளக்கமளிக்க வேண்டும் என்றும் எங்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் ஆண்டி எடுத்த சுவிசேஷம் அறிவித்தல் பற்றிய பகிர்வு ஒரு குழு அமைப்பில் நடத்தப்பட்டது. இது சுவிசேஷத்தின் அறிவிப்பைப் பற்றிய ஒரு குறிப்பிட்ட வசனப்பகுதியை நாங்கள் படிக்கவும், கவனிக்கவும் உதவியது. சுவிசேஷம் தேவைப்படும் மக்களுக்கு சுவிசேஷத்தைப் பகிர்வதற்கான வேதாகம வழியைப் புரிந்துகொள்ள இது எங்களுக்கு உதவியது. மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த மிஷனெரி மேனகா அக்காவின் ஊழியப் பகிர்வு மற்றும் FMPBஇன் வரலாறு ஆகியவை என் இருதயத்தைத் தொட்டு, கிறிஸ்துவின் அழைப்புக்கு என்னை மீண்டும் அர்ப்பணிக்க உதவியது.

இந்தப் பயிற்சி முகாமிற்கு முக்கிய காரணமாயிருந்த இளைஞர் பிரிவுக்கும், நமது இயக்கத்திற்கும் என் மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னைப் போன்ற இளம் தலைவர்கள் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்க இதுபோன்ற பயிற்சி முகாம்கள் மிகவும் அவசியமானவை என்பதால், வரும் நாட்களிலும் இதுபோன்ற அநேக பயிற்சி முகாம்கள் திட்டமிடப்பட்டு ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். நன்றி!

**- Mr. Asir Daniel Thomas, Redhills**









# சீடத்துவ ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. M. Jerome Stanley

சீடத்துவத்தின் எல்லா தன்மைகளும் ஒருங்கிணைந்து, உலக வரலாற்றிலேயே தன்னிகரற்று நிற்பது இயேசு கிறிஸ்துவின் சீடத்துவ ஊழியம். இன்றைய *Corporate* உலகில் தலைமைத்துவம் மற்றும் சீடத்துவ நெறிமுறைகளைப் பற்றி எத்தனை புத்தகங்கள் எழுதப்பட்டாலும், அவற்றில் கிறிஸ்துவின் தன்மைகளையும், அவர் தான் பூமியில் வாழ்ந்து காட்டிய வாழ்வியலையும் தவிர்க்க முடியாது. பெரிய அளவில் தொலைத் தொடர்பு சாதனங்களின் முன்னேற்றமில்லாத காலகட்டத்தில், இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் உலகத்தை தலைகீழாக மாற்றினார்கள்.

ஒரு சிறு கூட்டமாக உருவாகி, உலகை நிரப்பும் திரள் கூட்டமாக அது மாறும் என்று உலகம் ஒருபோதும் நினைக்கவில்லை. இதற்கு சங்கிலி தொடர் போல நடந்த சீடத்துவ ஊழியம் தான் முக்கிய காரணம். வேத புத்தகம் காட்டும் சீடத்துவத்தின் வரையறை என்னவெனில், கிறிஸ்துவின் போதனைகளைக் கற்றுக்கொண்டு, அதன்படி வாழ்ந்து, மேலும் பல சீடர்களை உருவாக்குவது, வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவைப் போல மாறுவதற்கான ஒரு செயல்முறை ஆகும். சீடத்துவத்தின் அம்சங்கள் புதிய ஏற்பாட்டு பகுதிகளில் அதிக வெளிப்படையாக இருந்தாலும், இதன் ஆரம்பப் புள்ளி பழைய ஏற்பாடு என்பதில் எவ்வித சந்தேகமும் வேண்டாம். உதாரணமாக 2 சாமுவேல் 19:18-24 வசனங்களில் சாமுவேலினால் பயிற்றுவிக்கப்பட்ட சீடர்களை நம்மால் பார்க்க முடிகிறது. மேலும் 2இராஜாக்கள் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எலியா மற்றும் எலிசாவைப் பற்றி நமக்கு நன்கு தெரியும். இப்படி பெரும் தொடராய் நீண்டு செல்லும் சங்கிலியை நாம் ஆராய்ந்தால் அது சேத் என்று கூட கூறலாம். யாத்திராகமத்தில் மோசே குருவினிடமிருந்து கற்றுக்கொள்ளும் சீடன் போல, சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தையும், கட்டளைகளையும், பிரமாணங்களையும் அவன் பெற்றுக் கொண்டான். குருவின் தன்மைகள் சீடனிடத்தில் வெளிப்படுவது போல, மோசேயின் மேலிருந்த ஒளி அவனை விட்டு நீங்கவே இல்லை. எபிரெய வரலாற்றுச் சுவடுகள் நமக்குச் சொல்லும் செய்தி, மோசேயின் முகத்தின் வெளிச்சத்தைப் பார்க்க முடியாதபடி மக்கள் தங்கள் முகங்களை மூட வேண்டியிருந்ததினால், அவன் மற்றவர்களுக்காக தன் முகத்தை முக்காடிட்டு கொண்டான்.

மோசேக்கு பின் யோசுவா என இந்த சீடத்துவ ஊழியம் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இன்றும் கர்த்தராகிய இயேசுவை தன்னுடைய வாழ்வின் இரட்சகராகவும், மீட்பராகவும் ஏற்றுக்கொள்ளும் அனைவரும் இந்த தொடர் ஊழியத்தின் பங்குதாரர்களே. இயேசு கிறிஸ்துவைச் சந்திக்க வந்தவர்கள், அவரை 'ரபி' என்றும் 'போதகர்' என்றும் அழைத்தார்கள். 'ரபி' என்பது எபிரெய பதம், அதன் பொருள் "*My Great One*" "என் பெரியவன்". இதற்கான இணை கிரேக்க பதம் இல்லாததினால் "ரபி" என்னும் எபிரெய பதத்தையே மொழிபெயர்ப்புகளில் பயன்படுத்தினார்கள். தன்னுடைய குருவை சீடர்கள் "ரபி" என்றே அழைத்தார்கள். சீடன் என்பதன் கிரேக்கப்பதம் "*Mathetes*". இதற்கு இணை எபிரேய பதம் "*Talmid*" இதன் பொருள் *To Learn/ Be Taught* - கற்றல், பயிற்றுவித்தல். இவற்றை இன்னும் சற்று ஆழமாக தியானிப்போம்.

முதல் நூற்றாண்டு இயேசு கிறிஸ்துவின் சீடர்களின் வாழ்வியலை நாம் புரிந்துக் கொள்வது அவசியமானது. 5 வயது நிரம்பியவுடன் சிறுவர், சிறுமியர்களுக்கு வேதாகமம் வீடுகளில் அறிமுகம் செய்யப்பட்டு, 13 வயதிற்குள் 5 ஆகமங்கள் முழுவதையும் கற்றுக் கொடுத்து விடுவார்கள். 13 வயது நிரம்பிய ஆண் பிள்ளைகள் ஆலயம் செல்லவும், பலிகளில் பங்குப் பெறவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இதில் ஆர்வமுள்ள ஆண் பிள்ளைகள், இந்த வேதாகம வகுப்புகளைத் தொடர்ந்து 18 வயது வரை கற்பார்கள். இத்தனை ஆண்டுகளில் அவர்கள் வேதாகமத்தின் பெருவாரியான பகுதிகளை மனனம் செய்து விடுவார்கள். திருமணம் செய்துக் கொண்ட பின்னரே தன்னுடைய ரபியை தேடுவார்கள். இதில் ஆர்வமில்லாதவர்கள் தங்கள் தந்தையின் வேலையைக் கற்றுக் கொள்வார்கள். பெரும்பாலும் சீடர்கள் தன் குருவிடம் தங்களைச் சீடராக ஏற்றுக்கொள்ள வேண்டுவார்கள் (மத். 8:19).

18 வயதிலிருந்து 30 வயது நிரம்பும் போது அந்த சீடன் ஒரு "ரபி" நிலைக்கு வந்து விடுகிறான். இந்த தகவல்களை வைத்து இயேசு கிறிஸ்து சீடர்களைத் தெரிந்தெடுத்த நிகழ்வுகளைப் பொருத்திப் பார்ப்போம். இயேசு கிறிஸ்துவிற்கு 30 வயது நிரம்பியிருக்குமாயின், சீடர்களின் வயதுகளை நிதானித்துக் கொள்ளுங்கள். பேதுருவின் உறவினனான அந்திரேயாவும், யோவானும் யோவான்ஸ்நானகனிடம் சீடனாகயிருந்தார்கள். இயேசு கிறிஸ்து மற்ற ரபிகளைப் போல இல்லாமல், ஒவ்வொரு சீடனையும் தனித்தனியே சந்தித்து தன்னைப் பின்பற்றும்படி சொன்னார் (யோவான் 15:16). அதன்படி அவருடைய சீடர்களாகும்படி உங்களையும், என்னையும் அழைத்திருக்கிறார்.

கிறிஸ்துவின் சீடர்களாக இயேசு கிறிஸ்து நமக்கு அருளிய கட்டளை மத்தேயு 28:19. இதனை இயேசுவின் சீடர்கள் மிக கச்சிதமாக நிறைவேற்றினார்கள். இதில் நாம் கற்க வேண்டிய ஒரு பாடம் இருக்கிறது. சீடர்கள், சீடர்களாகவே இருந்திருந்தால் இந்த சீடத்துவ ஊழியம் முதல் நூற்றாண்டோடு முடிந்திருக்கும். சீடர்கள் ஆசிரியர்களாகவும், குருவாகவும் மாறினார்கள். மற்றவர்களைச் சீடர்களாக மாற்றினார்கள். தங்களை இயேசு கிறிஸ்து தேடி வந்தது போல பல ஊர்களையும், கண்டங்களையும் தாண்டி பலரை இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக்கினார்கள். கவனம் மற்றவர்களை தங்களுடைய ரசிகர்களாக மாற்றாமல், இயேசுவின் சீடர்களாக மாற்றினார்கள்.

அன்பு தோழனே! தோழியே! உன் வாழ்வை சீடனாகவே முடித்து விடாதே. யாருக்கும் ரசிகனாக இருக்காதே. எல்லைகளைத் தாண்டி கலாச்சாரம் கடந்து, பலரை சீடர்களாக்க உன்னை குருவாகவும், ஆசிரியராகவும் கர்த்தர் அழைக்கிறார்.




# சமூக நுண்ணறிவு

## SOCIAL INTELLIGENCE

BOOSTER SPOT

Mr. Isaac Kamalesh

சமூக நுண்ணறிவு என்பது ஒருவன் தன்னுடைய மற்றும் பிறரின் உணர்வுகள், எண்ணங்கள் மற்றும் நடத்தைகளைப் புரிந்து கொண்டு தன்னை நிர்வகிக்கும் திறனாகும். இது சமூகத்தில் வலிமையான உறவுகளை ஏற்படுத்தும். மேலும் இது சுயவிழிப்புணர்வு, இரக்கம் மற்றும் தகவல் தொடர்பு போன்ற திறன்களை உள்ளடக்கியது. இந்த சமூக நுண்ணறிவை ஒருவன் இயல்பாகக் கொண்டிருக்கலாம் அல்லது தன்னுடைய அனுபவம் மூலம் வளர்த்துக் கொள்ளலாம்.

ஏன் இது முக்கியத்துவமாகத் தெரிகிறது என்றால், தனிப்பட்ட மற்றும் தொழில் அல்லது வேலை முன்னேற்றத்திற்கும், மேம்பட்ட உயரிய அணுகுமுறை மற்றும் தொடர்புக்கும், நம்பிக்கை மற்றும் சச்சரவற்ற கூட்டத்தை வழி நடத்தவும், நல்வாழ்வு, சிறந்த தலைவன், மனம் மற்றும் உடல் ஆரோக்கியம் இவற்றோடு வெற்றியுள்ள சமூக வாழ்க்கைக்கு இது பெரிதும் பங்களிக்கும்.

சமூக நுண்ணறிவுக்குள் அடங்கி கிடக்கும் ஏழு பாவங்களை நாம் பார்க்க வேண்டும். ஏனென்றால் ஒரு தனி மனிதனுக்கு கூடும் கூட்டத்தை வைத்து அந்த நபர் மிக அதிக சமூக நுண்ணறிவு பெற்றவன் என்று கூற இயலாது. குறிப்பாக இதில் காணப்படும் முதல் பலவீனம் கோபம். இரண்டாவது சுய பரிதாபம், இது மற்றவர்களை நாம் எப்படி பார்க்கிறோம் என்பதை சிதைக்கும். மூன்றாவது நிராகரிப்பைக் குறித்த பயம், இது தற்காப்பு மற்றும் தவறான சுய பாதுகாப்புக்கு வழிவகுக்கும். நான்காவது வெறுப்பு, இது ஜனங்களோடு பயணிக்க தடுக்கும். ஐந்தாவது பயம், இது பின்வாங்குதல், தேவையற்ற கட்டுப்பாட்டை உருவாக்கும் மற்றும் சூழ்நிலையைக் கவனிக்காது. ஆறாவது பொறாமை, இது உண்மையான திறமையை விஷமாக்கும், மற்றவர்களோடு ஒப்பிடுதல் மற்றும் வெறுப்புக்கு காரணமாகும். கடைசியாக பெருமை, இது சுயநலத்தின் வேர், மற்றவர்களை விட தன்னைத்தானே உயர்த்தும். இந்த ஏழு பாவங்களும் சமூக முட்டாள்களை உருவாக்கும்.

இன்றைய சமுதாயத்தில் பெரும் கவலையளிக்கும் போக்கு சமூக நுண்ணறிவு கொண்ட தலைவர்கள் இல்லை, தனி மனிதன் குறைவாக உள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக சமூக நுண்ணறிவற்ற ஊடகங்கள் பெருகி கொண்டிருக்கிறது. சமீபத்திய கூட்ட நெரிசல் மரணங்கள் அதை தொடர்ந்த சமூக ஊடகங்களின் பங்களிப்புகள் இதை உறுதிபடுத்துகிறதாயிருக்கிறது.

வேதத்தின் அடிப்படையில் இந்த சமூக நுண்ணறிவை பார்க்கும் முன்பு, இதை முறையாக வளர்க்க நீங்கள் செய்ய வேண்டிய 4 பயிற்சிகள்:

1. **கேட்க வேண்டும் (PRACTICE ACTIVE LISTENING):** மக்களைப் பாருங்கள், கவனியுங்கள். உங்கள் உரையாடலில் மட்டுமல்ல, பொது இடங்களில் மக்கள் அல்லது தலைவனின் பேச்சு மற்றும் சமூக ஊடகங்களைக் கவனித்து கேளுங்கள்.
2. **கவனிக்க வேண்டும் (OBSERVE OTHERS):** மக்களின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளைப் பாருங்கள்.
3. **புரிந்து கொள்ளுங்கள் (SEEK UNDERSTANDING):** உண்மையான நடுநிலை ஆர்வத்துடன் செயல்படுங்கள்.
4. **அனுபவங்களோடு ஒப்பிடுங்கள் (REFLECT ON EXPERIENCES):** உங்கள் அனுபவங்கள் வெற்றியோ, தோல்வியோ இரண்டிலுமே கற்றுக்கொள்ள ஆயத்தமாயிருங்கள்.

**இப்போது வேதாகமம் சொல்லும் காரியத்தைப் பார்ப்போம்.**

- அர்த்தத்தோடு தேவையானதைப் பேசி பழகுங்கள் (கொலோ. 4:6, எபே. 4:29, 1 தீமோ. 5:13).
- பரந்த மனப்பான்மை மற்றும் உதார குணத்தோடு வாழுங்கள் (1 பேதுரு 4:9, 1 தீமோ. 6:8).
- நேர்மையுடனும், பொறுப்புடனும் வாழ பழகுங்கள் (1 கொரி. 13:11, 15:33).
- ஒற்றுமை மற்றும் கூட்டுறவுடன் வாழுங்கள் (எபே. 5:21, 2 பேதுரு 1:7).
- இரக்கம் மற்றும் புரிதலுடன் வாழப் பழகுங்கள் (பிலி. 2:4, ரோமர் 12:16).

# வாசற்படியில்
# நியாயாதிபதி

Mrs. Kiruba Isaac

**ஒருவர்மேலொருவர் சகோதர சிநேகத்திலே பட்சமாயிருங்கள்.**
**ஒருவருக்கொருவர் கனம்பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுங்கள்.**
**ஒருவருக்கொருவர் அன்பினாலே ஊழியஞ்செய்யுங்கள்.**
**ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**
**ஒருவருக்கொருவர் தெய்வ பயத்தோடே கீழ்ப்படிந்திருங்கள்.**
**ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்.**
**ஒருவருக்கொருவர் அநியாயம் செய்யாதிருங்கள்.**
**ஒருவரையொருவர் தாங்குங்கள்**
**ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.**
**ஒருவருக்காக ஒருவர் ஐக்கியத்தில் கூடிவரும்போது காத்திருங்கள்.**
**ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லுங்கள்.**
**ஒருவருக்கொருவர் தயவாயும், மனவுருக்கமாயும் இருங்கள்.**
**ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.**
**ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்.**
**ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.**

*ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்;*
*இதோ, நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்.*
*யாக்கோபு 5:9*

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.





# இறையியல் Vs மாம்சயியல்
# Theology Vs Myology



Rev. Daniel Gnanapragasam

கடவுளைப் பற்றி பேசும் போது இறையியல் வருகின்றது. இறையியல் என்று நாம் சிந்திக்கின்றபோது THEOS · LOGOS என்ற இரண்டு கிரேக்க பதங்கள் கடவுளின் வார்த்தையாகப் புரியப்படுகிறது. காணக்கூடாத, புலப்படாத, எல்லையற்ற, பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட சர்வ வல்லமையுடைய, படைத்தவரை குறித்த ஒரு சொல் தான் இறையியல். இறைவனைப் பற்றி பேசும்போது திறந்த மனதோடு கூடிய புரிதல் அவசியம். கடவுளைப் பற்றியும், அவர் வார்த்தைகளைப் பற்றியும் அறிந்துக் கொள்ள, புரிந்துக் கொள்ள 5 அடிப்படை காரணிகள் வகைப்படுத்தப்படுகின்றன.

1. **திருமறை (SCRIPTURE):** இறைவன் நம் வாழ்வியல் வரலாற்றில் செயல்பட்ட காரியங்கள், அவரின் சுபாவம், மாண்பு, வல்லமையை குறித்து அறிய உதவுகிறது.
2. **மரபுகள் (TRADITION):** கடவுளைக் குறித்து ஏற்கனவே அறிந்த முன்னோர்கள் ஏற்படுத்திக் கொடுத்த பழக்கவழக்கங்கள், வாழ்வியல் முறைகள்.
3. **வெளிப்பாடுகள் (REVELATION):** ஆண்டவர் தம்மை நமக்கு பிரத்தியேகமாக வெளிப்படுத்திய விதங்கள்.
4. **சூழல் (CONTEXT):** நாம் வாழும் சூழலில் நம்மைவிட மேலான கடவுளின் வல்லமை செயல்படும் விதம்.
5. **அனுபவங்கள் (EXPERIENCE):** சர்வ வல்லமை கொண்ட கடவுளை சில தெய்வீக அனுபவங்கள் மூலம் அறிந்து கொள்ள இயலும்.

இந்த ஐந்து காரியங்களினாலும் இறைவனைக் குறித்த இறையியலை அறிந்து கொள்ள முடியும்.

மாம்சயியல் அல்லது தசையியல் என்று நாம் பார்க்கும் போது அங்கேயும் இரண்டு கிரேக்க சொற்கள் (MYO & LOGIC) மாம்ச தசை குறித்த கல்வியாகும். மாம்சம் அல்லது தசை என்பது தனித்து செயல்பட முடியாது. அது நிணமுள்ள எலும்புகளோடு இணைந்து செயல்படக்கூடிய ஒன்று. மாம்சம் பெலவீனமுள்ளது என்று நாம் திருமறையில் காண்கிறோம். பெலவீன பாண்டமாகிய மாம்ச தசை அமைப்பை எலும்புகளோடு இணைத்தால் மட்டுமே படைப்பாளரின் மகிமையையும், மேன்மைகளையும் அறிய முடியும்.

இந்த இரண்டு பரிமாணங்களும் இரு வேறு திசைகளில் பயணிக்கும் ஒரு செயல்பாடு. நம் மாம்சீக தசைகளோடு இறைவனின் ஆவி ஒரு ஆற்றலாக இணைந்து, அழியாத ஆத்துமாவாக மாறியிருக்கிறது. இதுவே நமக்கு பெலனாக உள்ளது என்பதை நாம் இரு நிலைகளில் வேறுபடுத்தி அறிந்து கொள்வோம்.

| | இறையியல் (THEOLOGY) | மாம்ச தசையியல் (MYOLOGY) |
|---|---|---|
| 1. | இறை கூற்றுப்படி ஆண்டவர் ஒருவரே. எனவே அவர் உண்டாக்கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர் (ஆதி. 1:1, 2). | தசைகள், உடல் உறுப்புகள், மாம்சம் என்று எல்லாம் உண்டாக்கப்பட்டவைகள் (ஆதி. 2:7, சங். 139:6, எரே. 1:5). |
| 2. | காலத்திற்கும் அப்பாற்பட்டது (Timeless). சதாகாலங்களிலும் நம்மோடிருப்பவர் (மத். 28: 20). | பெலத்தின் மிகுதியால் 80 வருடங்கள், காலங்கள் அவர் கரத்தில் இருக்கிறது (சங். 90:10, 31:15) |
| 3. | முடிவில்லாத ஆண்டவரைக் குறித்ததுதான் இறையியல். உலகத்திற்கு முடிவு உண்டு (மத். 28: 20). | மாம்ச இயலுக்கு துவக்கமும், முடிவும் அறிந்த ஒன்று (யோபு 19:25). |
| 4. | ஒப்பு நிகரற்றவர், உன்னதமானவர் (சங். 89:6). | இணையான மனிதர்கள் வாழும் மண்ணிலுள்ள மாம்சீக மாந்தர்கள் (ஆதி. 6:3). |
| 5. | மனித வேதனையை அறிந்தவர், இவர் மாம்சத்தில் வெளிப்பட்டார் (யோவான் 1:14). | வேதனை நிறைந்த மனித மாம்ச தசைகள் நம்மை காப்பாற்றாது (ரோமர் 8:3). |
| 6. | இறையியல் அழியாத ஒன்று, அது என்றும் நிலைக்கும். | மாம்ச இயல் அழிவிற்குரியது, நாளை நடக்கும் காரியம் அறியாத ஒன்று (சங். 31:12). |
| 7. | என்றென்றும் நினைவில் கொள்ள வேண்டிய ஒன்று (உபா. 6:7, 8) | மாம்சக் கிரியைகள் நினைவில் கொள்ள இயலாத ஒன்று. |
| 8. | சர்வ வல்லமையுடையவரைப் பற்றியது. சாவை வென்றவரைப் பற்றியது (சங். 29). | சாவைத் தவிர்க்க இயலாத மாம்சீகம் (ரோமர் 6:23). |
| 9. | நிர்ப்பந்தத்திற்கும், நிபந்தனைகளுக்கும் அப்பாற்பட்டவர் (1 கொரி. 15:57). | நிர்ப்பந்தமான மனுஷ சரீரம் (ரோமர் 7:24). |
| 10. | வீண் போகாத நம்பிக்கையைப் பற்றியது (எபி. 12:1). | நம்பிக்கை இல்லாத நிலையற்ற மாம்சம். |

இப்படியாக இறையியல் நிணமுள்ள எலும்பு போல, மாம்சம் அழிந்தாலும் அழியாதபடி நிலைத்து நிற்கும். மேலும் அது வாழ்வு தரும் இறையியல், வழிகாட்டும் இறையியல். எபி. 4:12இன்படி இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகும். மாம்சீக உலகில் இறைவனை மையப்படுத்தும் இறையியலைப் பற்றிக் கொண்டு வாழ்வோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!



# திருச்சபை நிர்வாக ஊழியம்

Mr. Israel Nathaniel Edward

4th WEEK MESSAGE

NT MISSION

“ஊழியம்” (கிரேக்க மொழியில் DIAKONIA) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்குச் சேவை செய்வது என்று பொருள். முன்னர் குறிப்பிட்டதுபோல், இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கிபி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் திருச்சபை நிர்வாக ஊழியத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

1 தீமோத்தேயு 3:1இல் பவுல், ஒருவர் மேற்பார்வையாளராக இருக்க வேண்டும் என்று விரும்பினால், அவர் ஒரு உன்னதமான வேலையை விரும்பினார் என்று எழுதினார். ஏனெனில் ஒவ்வொரு அமைப்பிற்கும் தன்னார்வலரான நிர்வாகிகள் தேவை. தேவன் உருவாக்கிய முதல் நிறுவனமாகிய குடும்பத்திற்குக் கூட இதிலிருந்து விலக்கு அளிக்கப்படவில்லை. தேவன் கணவனை குடும்பத்தின் தலைவனாக ஆக்கினார். அதேபோல், தன்னுடைய சபையின் விவகாரங்களை நடத்துவதற்கும் மேற்பார்வையாளர்களை நியமிக்க தேவன் விரும்புகிறார். நிச்சயமாக, இந்த நிர்வாகப்பணி ஒரே ஒரு நபருக்கு ஒருபோதும் வழங்கப்படுவதில்லை. மாறாக பல்வேறு நிலைகளிலுள்ள ஒரே மனதுடைய பலருக்கு ஒப்படைக்கப்படுகிறது (யாத். 18:24-26). முதல் நூற்றாண்டுத் திருச்சபையில் திருச்சபை நிர்வாக ஊழியம் என்பது ஒரு முறைசார்ந்த, மையப்படுத்தப்பட்ட அதிகாரமாய் இருக்கவில்லை. மாறாக வளர்ந்து வரும் கிறிஸ்தவ சமுதாயத்தின் தேவைகளுக்குப் பதிலளிக்கும் வகையில் உருவான ஒரு இயற்கையான மற்றும் உருமாறும் கட்டமைப்பாக இருந்தது. அது அப்போஸ்தலர்களின் ஆரம்பகால தலைமைத்துவத்தில் தொடங்கி, ஆவியானவரால் நடத்தப்படும் உள்ளூர் தலைமைத்துவமாக உருமாறினது என நாம் வேதத்தில் காண்கிறோம்.

## ஆரம்பகால அப்போஸ்தலர்களின் தலைமை:

ஜெபமும், தேவ வார்த்தையின் போதனையும் தங்களின் முதன்மையான பொறுப்புகளாக அப்போஸ்தலர்கள் கருதினர் (அப். 6:4). எனவே, எருசலேம் தேவாலயத்திலும், வீடுகளிலும் ஜெபக் கூட்டங்களை ஏற்பாடு செய்தனர் (அப். 2:46). அப்போஸ்தலர்களின் போதனை, ஐக்கியம், அப்பம் பிட்குதல், ஜெபம் ஆகியவற்றுக்கு விசுவாசிகள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர் (அப். 2:42). இயேசுவே நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மேசியா என்று அறிவிக்கும்விதமாக அப்போஸ்தலர்கள் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தினர். அவர்கள் செய்தியை உறுதிப்படுத்த தேவன் வல்லமையான அற்புதங்களைச் செய்தார் (அப். 4:31, 5:12). யூதாஸுக்குப் பதிலாக மத்தியாவைத் தெரிந்தெடுத்தது (அப். 1:26), எருசலேம் சபையின் விதவைகளுக்கு உணவு விநியோகத்தைக் கவனிக்க ஏழு ஊழியர்களின் குழுவை அமைத்தது (அப். 6:5-6), யூத மையப்படுத்துவோருக்கும், புறஜாதி சபைகளுக்கும் இடையேயான விவாதத்தைத் தீர்த்தது (அப். 15:19-21) போன்ற மேலாண்மையையும் அவர்கள் கவனித்துக் கொண்டனர்.

## உள்ளூர் தலைமையின் பரிணாம வளர்ச்சி:

பவுல், மற்ற அப்போஸ்தலர்கள் மற்றும் விசுவாசிகள் எருசலேமிலிருந்து தொலைவில் சபைகளை நிறுவியபோது, அப்போஸ்தலர்களால் அவற்றிற்கு நேரடித் தலைமையை வழங்க முடியவில்லை. எனவே, ஒரு முறைசார்ந்த உள்ளூர் தலைமைக் கட்டமைப்பு உருவாகத் தொடங்கியது.

## புதிய ஏற்பாட்டில் மூன்று முதன்மையான பதவிகள் குறிப்பிடப்பட்டன. அவை

### 1. மேற்பார்வையாளர்கள் (எபிஸ்கோபோய் / பிஷப்புகள்):

“எபிஸ்கோபோஸ்” என்ற கிரேக்க சொல்லுக்கு “மேற்பார்வையாளர்” அல்லது “மேலாளர்” என்று பொருள். ஆரம்பத்தில் இந்த சொல் “மூப்பர்” என்பதற்கு இணையாக பயன்படுத்தப்பட்டதாகத் தெரிகிறது. சபையினரை மேய்ப்பது, நல்ல உபதேசத்தைக் காப்பாற்றுவது, சபையின் பொது மேற்பார்வை ஆகியவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்தனர் (அப்.20:28, பிலி. 1:1, 1தீமோ. 3:1-7).

### 2. மூப்பர்கள் (பிரெஸ்பைட்டரோய் / பிரெஸ்பைட்டர்கள்):

இது யூத ஜெப ஆலயங்களிலிருந்து கடன் வாங்கப்பட்ட ஒரு தலைமைத்துவ மாதிரியாகும். இது முதிர்ச்சியான, மரியாதைக்குரிய ஆண்களின் குழுவைக் கொண்டிருந்தது. உள்ளூர் சபையை ஆளுதல், போதித்தல், நோயாளிகளுக்காக ஜெபித்தல் மற்றும் ஆன்மீக வழிகாட்டுதல் ஆகியவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்தனர் (அப். 14:23, யாக். 5:14, 1பேதுரு 5:1-5). அப். 20:17 மற்றும் தீத்து 1:5-7இல் “மூப்பர்கள்” மற்றும் “மேற்பார்வையாளர்கள்” நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளனர். மூப்பர்களே உள்ளூர் சபையின் மேற்பார்வையாளர்களாக இருந்தனர் என்பதை இது குறிப்பிடுகிறது.

### 3. உதவிக்காரர்கள் (டியோகோனோய் / சேவகர்கள்):

“டியோகோனோஸ்” என்ற சொல்லுக்கு “சேவகன்” அல்லது “உதவிக்காரன்” என்று பொருள். அப். 6இல் உள்ள ஏழு பேரின் மாதிரியிலிருந்து இந்தப் பங்கு உருவானது. இது நடைமுறை மற்றும் கிருபையுள்ள சேவையில் கவனம் செலுத்தியது. சபை நிதிகளை மேலாண்மை செய்தல், ஏழைகள் மற்றும் நோயாளிகளைக் கவனித்தல், சமூகத்தின் நடைமுறை மற்றும் பொருள்சார்ந்த தேவைகளைக் கையாளுதல் ஆகியவற்றுக்கு அவர்கள் பொறுப்பாக இருந்தனர். இது மூப்பர்கள் / மேற்பார்வையாளர்களை ஆன்மீக தலைமைக்கு விடுவித்தது (பிலி. 1:1, 1தீமோ. 3:8-13).

## மூப்பர்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவிக்காரருக்கான அத்தியாவசிய தகுதிகள்:

தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் பவுல் எழுதிய கடிதங்களிலிருந்து, தன்னடக்கமுள்ளவராக இருத்தல், விருந்தோம்பல் செய்பவராக இருத்தல், போதிக்கத் தகுதியுள்ளவராக இருத்தல், நேர்மை, பரிசுத்தம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை மூப்பர்களுக்கான சில அத்தியாவசிய தகுதிகளாக நாம் காணலாம் (1தீமோ. 3:2-7, தீத்து 1:7-9). உதவிக்காரர்கள், உண்மையுள்ளவர்களாகவும், சோதிக்கப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டியதாயிருந்தது (1தீமோ. 3:8, 10). இந்த தகுதிகளுக்கு கூடுதலாக மூப்பர்களும், உதவிக்காரர்களும் தங்கள் சொந்த குடும்பங்களை நன்றாக நிர்வகிப்பவர்களாகவும், தங்கள் பிள்ளைகளில் தெய்வீக ஒழுக்கத்தை ஊட்டுபவர்களாகவும் இருக்க வேண்டியதாயிருந்தது (1தீமோ. 3:4, 5, 12).

## விளைவு:

இந்த அடிப்படைக் கட்டமைப்பும் நிர்வாகிகளின் பிழையற்ற குணநலனும், ஆரம்பகால திருச்சபை வளர்ந்து பெருகத் தேவையான நிலைப்பாடு மற்றும் ஒழுங்கை வழங்கிய, அதே நேரத்தில் பல்வேறு கலாச்சார சூழல்களுக்கு ஏற்ப மாற்றியமைக்கப் போதுமான நெகிழ்வுத்தன்மையையும் கொடுத்தது.

## நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

நம்முடைய சபைகளுக்கும், ஒரு ஒழுங்கான நிர்வாக கட்டமைப்பும், மேலே பட்டியலிடப்பட்டுள்ள குணங்களைக் கொண்ட நிர்வாகிகளும் தேவை. அப்படியானால் நமது காலத்திலும் சபையில் வெடித்து சிதறும் வளர்ச்சியிருக்கும். தேவன் உங்களை அழைத்தால், நமது சபைகளை நிர்வகிப்பதற்காக அத்தகைய ஒழுக்கமான, பரிசுத்தமான, ஒழுங்கமைக்கப்பட்ட வாழ்க்கை முறைக்கு நீங்கள் உங்களை அர்ப்பணிப்பீர்களா?





**தொடர்புக்கு:** FMPB : 9894060046
9841936067 | 9600114574





# ஆய்வு வாசல் (MUSTER GATE)



Rev. Prabakara Sarathy

### ஆய்வு வாசலைப் பற்றி:

நெகேமியா 3:31இல் ‘ஆய்வு வாசல்’ (Muster Gate) பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது “பரிசோதனை வாயில்” என்றும் அழைக்கப்படுகிறது. ஆங்கில வேதாகமத்தில் இது “மிப்காத் வாசல்” (எண்ணிக்கை என்பது பொருள்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. RSV மொழிபெயர்ப்பில் “ஹம்மிப்காட்” என விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. நெகேமியாவின் காலத்தில், எருசலேமின் பன்னிரண்டு வாசல்களும் பழுதுபார்க்கப்பட்ட காலத்தில் இந்த வாசலும் பழுது பார்க்கப்பட்டது. இந்த வாசல், தேவாலய மேடையின் அருகே கிழக்குப் பகுதியில் அமைந்திருந்தது. மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய தகவல்களைச் சேகரிப்பது மற்றும் இராணுவத்தின் மூலம் துருப்புக்களின் எண்ணிக்கையை எண்ணுவது போன்ற நிர்வாக விஷயங்களுக்கு இந்த வாசல் முக்கியத்துவம் பெற்றது.

### ஆய்வு வாசலைப் பற்றிய புரிதல்:

புதிய ஏற்பாட்டின்படி ஆய்வு வாசல் (Muster Gate) கிறிஸ்துவில் ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்க்கையின் பரிசோதனைக்கான இடத்தைக் குறிக்கிறது. தேவனைப் பற்றிய அறிவில் வளர நம்மை நாமே சுய பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது. இந்த இடம், **‘விசுவாசிகள் ஒரு சபையாகக் கூடும் இடம்’** என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

### ஆய்வு வாசலின் முக்கியத்துவம்:

இது **‘நியாயத்தீர்ப்பு வாசல்’** அல்லது **‘பரிசோதனை வாசல்’** என்ற பொருளைக் கொண்ட கடைசி வாசல் ஆகும். நியாயத்தீர்ப்பு நாள் வரப்போகிறது; கர்த்தருடைய நாள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஆனால் அந்த இறுதி நாள் நிச்சயமாக வரும். அந்த நாளை ஒவ்வொரு கண்களும் காணும் என்பதை எல்லா விசுவாசிகளுக்கும் நினைவூட்டுகிறது. இந்த ஆய்வு வாசலைச் சீரமைக்கும் பணி, பழுதுபார்க்கும் தொழிலாளர்கள், தங்க வேலை செய்பவர்கள் மற்றும் வணிகர்கள் இணைந்து செய்யும் வேலையாக இருந்தது. இது கடவுளின் விதிகள் மற்றும் திட்டங்களில் மக்களின் ஒற்றுமை மற்றும் உடன்பாட்டைக் காட்டுகிறது. ஒவ்வொருவரும் இந்த வேலைக்காக தங்களை ஈடுபடுத்தி கொண்டனர்.

### ஆய்வு வாசலின் ஆவிக்குரிய பாடங்கள்:

இது தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக எல்லா விசுவாசிகளும் கூடும் நியாயத்தீர்ப்பு நாளைக் குறிக்கிறது. பல்வேறு திறமையான மற்றும் ஊக்கத்துடன் வேலை செய்பவர்களால் இந்த வாசல் பழுது பார்க்கப்பட்டது. இது ‘கிறிஸ்துவின் சரீரமான’ ‘தேவனுடைய ஆலயம்’ நிறைவடைவதற்கான விசுவாசிகளின் ஒற்றுமையைக் குறிக்கிறது. இந்தப் பழுதுபார்க்கும் பணி எருசலேமின் சுவரை மட்டும் அல்ல, மக்களின் ஆவிக்குரிய புதுப்பித்தலையும் குறிக்கிறது. அனைத்து வாசல்களும் பழுதுபார்க்கும் பணியின் நிறைவு என்பது கடவுள் தம்முடைய மக்களான இஸ்ரவேலரை உண்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருப்பதன் பிரதிபலிப்பாகும். தேவன் தம்முடைய வாக்குறுதிகளையும், மக்களுடனான உடன்படிக்கை உறவையும் நிறைவேற்றுகிறார்.

### ஆய்வு வாசலின் சுய பரிசோதனை:

**“என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை; என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே”** என்று 1 கொரிந்தியர் 4:4 தெரிவிக்கிறது; இறுதி நிறைவு கிறிஸ்துவின் நியாயாசனத்தில் உள்ளது. நாம் வாழும் வாழ்க்கையும், ஆவிக்குரிய நிலையும் கர்த்தருக்கு முன்பாக ஒரு திறந்த புத்தகம் போல் உள்ளது. கர்த்தர் நியாயந்தீர்த்து எல்லாவற்றையும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாகக் கொண்டு வருவார். நம்முடைய வாழ்க்கை கடைசியாக நித்தியத்தில் நிறைவடைய வேண்டும் என்ற இலக்கை நாம் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் தீமைக்கு எதிராக போராடி சோதனைகள் மற்றும் போராட்டங்கள் மீது வெற்றி பெற வேண்டும். இறுதியாக, உலக வாழ்வு நிரந்தரமானதல்ல, ஆனால் தேவனுடைய இராஜ்யமே நிலைத்திருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

### நியாயத்தீர்ப்பு நாளுக்காக FMPB செய்வது என்ன?

FMPB கிராமங்கள், நகரங்களிலுள்ள மக்களுக்கு அவர்களின் கலாச்சாரங்களைத் தாண்டி, மிஷனெரியாக ஊழியத்தில் ஈடுபட ஒரு வெளிப்படையான அழைப்பைக் கொடுக்கிறது. FMPB, நம் நாட்டில் சபைகள் மற்றும் கிறிஸ்தவர்கள் இல்லாத இடங்களைத் தேர்ந்தெடுத்து ஊழியத்தில் ஈடுபடுகிறது. கர்த்தர் முழு உலகத்தையும் நியாயந்தீர்க்க வரப் போகிறார் என்று எச்சரிக்கைச் செய்கிறது. ஆகவே மக்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு பழுதுபார்க்கப்பட, திருச்சபைகளில் உள்ள விசுவாசிகள் இம்மாபெரும் பணியில் ஈடுபடும் வாய்ப்புகளை FMPB வழங்குகிறது.

வாலிபர்களே, நீங்களும் எங்களுடன் முழுநேர ஊழியர்களாக, பகுதி நேர ஊழியராக, ஜெபக்குழுத் தலைவராக மற்றும் ஊழியத்தை ஆதரிப்பவராக (Sponsor) இணைந்து உங்கள் திறமைகளைக் கர்த்தருக்கென்று பயன்படுத்துங்கள். அல்லது நீங்கள் FMPB கூட்டங்களில் ஒரு இசையமைப்பாளராகவோ, தலைமையகத்தில் ஒரு கணிணி உதவியாளராகவோ அல்லது எங்கள் ஆங்கில வழிப் பள்ளிகளில் ஆசிரியராகவோ, மருத்துவமனைகளில் மருத்துவ ஊழியர்களாகவோ இணைந்து உங்கள் வாலிபப் பருவத்தை கர்த்தருடைய விரிவாக்கப்பணிக்காகப் பயன்படுத்துங்கள்.





குஜராத் பணித்தள விஜயம் -
அண்ணாநகர் வாலிபர்கள்



குஜராத் பணித்தள விஜயம்
- பெங்களூர் வாலிபர்கள்



வாலிபர் கூடுகை - வேலூர்




வாலிபர் முகாம் - பெரியமலை





ஹிமாச்சல் பணித்தள விஜயம் - திருநின்றவூர் வாலிபர்கள்





வாலிபர் முகாம் - தூத்துக்குடி





பயிற்சி முகாம் – விருதுநகர்
பிராந்தியம்



வாலிப தன்னார்வலர்கள் பயிற்சி
முகாம் - பூண்டி